சிவாஜி

வாழ்வுப் புதிர்

புதிரில்லை புதிதில்லை
பூமிக்குள் உள்ளது தான்
விதிச்சிக்கல் படைப்புண்மை
விளக்குரஸ வாதமிது

மண்ணுக்குள் முழையிருட்டில்
மக்கும் உயிர்ப் பேருண்மை
விண்ணேக்கிச் செல்கிறது
வித்தாரம் பயில்கிறது

மனித உடல் அரண்மனையில்
மனமங்கை அரவணைப்பில்
சிந்தனை செம்பஞ்சணையில்
சேரும் உயிர்ப்பேதமிது.

"வளரும் தமிழ்"

ஆரூரில் நடைபெற்ற தமிழ்த் திருநாள் வைபவத்தைப் பற்றி விரிவான விமர்சனக் கட்டுரை மூன்றும் பக்கத்தில் ஆரம்பமாகிறது. 4 வாரங்கள் தொடர்ந்து அதேபக்கத்தில் வெளிவரும். தமிழ் இலக்கிய வளர்ச்சியைப்பற்றிய பல அறிஞர்களின் பேச்சுக்கள் ஆங்காங்கு விமர்சிக்கப்படும்.

ஆர். ஸ்ரீநிவாசய்யர்

"உலகெலாம் ஓர் பெருங்கனவு. இஃதுளே உண்டு உறங்கிப்பின் மாய்ந்திடும் மனிதனுடைய வாழ்வு கனவுக்குள் ஒரு குட்டிக்கனவு" என்றார் பாரதியார். இப்படிக் கோடானுகோடி மனிதர்களின் வாழ்வெல்லாம், அவர்கள் இயங்கி விட்டுச்சென்ற மூச்செல்லாம் சேர்ந்தே மனித குலம் என்று ஒரு நியதியும் அதற்கு ஒரு சரித்திரமும், அதன் பெயரால் ஒரு நாகரீகமும் வளர்ந்து எல்லையற்று நீண்டு போய்க்கொண்டிருக்கிறது. விளங்காத—விளக்கமுடியாத இந்த மாயச் சங்கிலித்தொடரில் மனித குலத்தின் ஒண் சுடர் மணிகளாக தனித்தனி மேதைகள் தோன்றி மறையும் போது தான் மற்றவர்கள்—எஞ்சியிருக்கும் ஏனைய மாந்தர்—ஒரு கணம் நின்று பெருமூச்சுவிட வேண்டியிருக்கிறார்கள். தோற்றத்தின் வித்திலேயே அழிவின் ஆணிவேரும் பொதிந்து வைத்திருக்கும் நியதி நாம் அறியாததல்ல. ஆகனால் அழிவைக்கண்டு நாம் அங்கலாய்க்காமலிருக்க முடியவில்லை. போதிய ஞானம் இன்னும் மனிதனுக்கு வந்துவிடவில்லை என்ற காரணம் கூறி அழிவைக்கண்டு அயரும் மனித ஏக்கத்தை அலட்சியப்படுத்திவிட வேண்டியதில்லை. ஏங்கி ஏங்கித்தான் மனிதன் அழியாத அமர நிலையைக் கண்டு பிடித்தாகவேண்டும். அந்த ஏக்கம் இல்லையானல் வாழ்வு என்பதே ஒன்று இல்லாமல் போய்விடும். மனிதர்கள் இறந்து போவதைப் பார்த்துக்கொண்டுதான் உயிருக்கு மரணமில்லை என்று நாம் நம்பிவருகிறோம். அதாவது அப்படி ஒருநிலை இருக்க வேண்டுமென்றும் அது நமக்கு வசமாகி விடவேண்டுமென்றும் நமக்கு இருக்கும் உயிர்த்துடிப்புதான் இதில் தெளிவாகத் தெரிகிறது. ஸ்தூல வடிவங்களை அழியாமல் தடுத்து நிறுத்தும் முயற்சியில் தான் அழியாத-என்றும் நிலைத்து நிற்கும் சூக்ஷ்மமான உண்மைகளை உணர முயற்சிக்கிறோம். புலன்களுக்கெட்டாத உயிர் அழிவதில்லை என்ற ஞானத்தை சம்பாதித்து ஆறுதல் கொள்ளுகிறோம். இந்த மாதிரி நம்மை நாமே தேற்றிக்கொள்ளும் சம்பவங்களின் தொகுப்புதான் மனிதகுலத்தின் சரித்திரக்கோவை. (15-ம் பக்கம் பார்க்க)

1-5-49 (சிறுவர் மலருடன்) விலை அணா 2

இருபத்திரண்டாம் அத்தியாயம்

அப்ஸல்கான்

அவுரங்கசீபிடமிருந்து சிறிதும் எதிர்பாராத விதமாக விமோசனம் கிடைத்தது குறித்து பீஜபுரி அரசாங்கத்தினர் அமோகமாகச் சந்தோஷமடைந்தனர். மொகலாயர் பிற்காலத்தில் ஏதோ ஒருநாள் திரும்பவும் படையெடுத்து வரத்தான் போகிறார்கள் என்ற பயம் இருந்த போதிலும், அப்போதைக்கு மூச்சுவிட அவகாசம் கிடைத்தது அவர்களுக்கு இன்பகரமாகத் தானிருந்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் வாரிசுப் போராட்டம் நீடிக்கும் வரையில் பீஜபுரிக்குக் கவலையில்லை என்ற நிலை தெளிவாக இருந்தது.

இப்போது பீஜபுரி பட்டத்தில் பத்தொன்பது வயதுப் பையன் சுல்தானாக ஆட்சி நடத்திவந்தான். உண்மையில் அவனுக்கு அரசியல் பரிசயம் ஏதுமில்லை. அரசாங்க விஷயங்கள் எல்லாவற்றையும் அவன் தாயே கவனித்து வந்தாள். இந்தத் தாய்க்கு நல்ல உத்வேகமும், அரசியலில் பற்றும், ஊக்கமும் நிறைய இருந்தது குறிப்பிடத்தக்கது.

அவுரங்கசீப் விஷயம் இவ்வாறு ஒத்திப் போன பிறகு உடனடியாகக் கவனிக்க வேண்டிய வேறொரு விஷயமும் இருந்தது. நாட்டின் மத்திய அரசவைக்கு அடங்காது புரட்சி செய்துவந்த சிற்றரசர்களை அடக்குவதே இந்த வேலை. இதைக் கவனிப்பதில் இந்தத் தாய் ரொம்ப அக்கரையோடு ஈடுபட்டாள். இத்தகைய சிற்றரசர் கோஷ்டியில் சிவாஜியின் பெயர்தான் முன்னணியில் இருந்தது. இதில் வியப்படைய ஏதுமில்லை. உண்மையில் சிவாஜி ஒருவனேதான் இந்தக் கோஷ்டியில் இருந்தான் என்றுகூடச் சொல்லிவிடலாம்.

1659-ம் ஆண்டில் இந்த மாதரசி தன் அரசவையில் முக்கிய பிரதானிகளை வரவழைத்து ஒரு கூட்டம் கூட்டினாள். உடனடியாக பீஜபுரி சேனையை வலுப்படுத்தி விஸ்தரிக்க வேண்டிய ஆயத்தங்களைச் செய்தாள்.

அவளது மைத்துனன் அப்ஸல்கான் என்பவன் முதலில் தனது உதவியைக் கொடுக்க முன்வந்தான். அப்ஸல் ஒரு ஆப்கன். அவன் ஒரு மகத்தான வாள்வீரனென்றும், திறமை மிகுந்த படைத்தலைவன் என்றும் பிரசித்திபெற்றவன். சமீபத்தில் நடந்த முகலாயப் படையெடுப்புக் காலத்தில் பாராட்டுக்குரிய பல செயல்கள் புரிந்து புகழ் பெற்றவன்.

அப்ஸல்கானின் வீர மிகுந்த வாசகங்களை கேட்ட அம்மாதரசி சிவாஜியை அடக்கும் வேலையை அவன் கைவசமே ஒப்படைக்க முன்வந்ததில் அதிசயமேதுமில்லை. அவன் தலைமையில் மகத்தானதொரு சேனை, துருக்கிய துப்பாக்கிகளுடன் திரட்டப்பட்டது.

அப்ஸல்கான் பகிரங்கமாக தர்பாரின் முன்னர் தன் திறமைகளைப் பற்றிப் பேசிவந்தான். தான் குதிரையிலிருந்து இறங்காமலே அந்தச் "சிறு ஹிந்துத் திருடனை"ச் சிறைப்பிடித்து விடுவதாகக் கூறினான். ஒரு கூண்டில் அவனை எலியைப்போல அடைத்து, பீஜபுரிக்கு இட்டு வந்து மக்களெல்லோரும் அவனைக் கண்டு நகைக்குமாறு செய்வதாகப் பேசினான்.

ஆனால் அவன் இவ்வாறு பகிரங்கமாகப் பேசியதெல்லாம் அவனது உண்மையான உணர்ச்சிகளை வெளியிட்டதாகச் சொல்ல முடியாது. உண்மையில் சிவாஜியிடம் அவனுக்கு ஏராளமான பயம் இருந்தது. மலைச் சிகரத்திலிருந்துகொண்டு மாயவேலைகள் செய்த அந்த சிவாஜி தன்னை எவ்வாறு மடக்கி விடுவானோ என்ற அச்சம் அவனுக்கு உண்டு. அரண்மனை மாதரசியிடம் தனியாகப் பேசுங்கால் சிவாஜியைத் தந்திரமாக மடக்க வேண்டும் என்று அவன் கூறினான். சிநேகிதனைப்போல் நடித்துத்தான் சிவாஜியைப் பிடிக்க முடியும் என்ற முடிவுக்கு அவன் ஏற்கனவேயே வந்திருந்தான்.

அப்ஸல்கானின் பயத்துக்கு சாதகமாக மராத்திய வர்க்கத்தினரிடையே வழங்கும் கதைகள் பல சாட்சியம் கூறுகின்றன. அப்ஸல்கான் படையெடுத்துப் போகுமுன் மசூதிக்குச் சென்ற காலத்தில் "உனக்குத் தலையே இல்லையே! காணோமே!" என்று அந்த மசூதியிலிருந்த ஒருவர் கூறியதாக ஒரு மராத்தியக் கதை சொல்லுகிறது. திரும்பி வந்த அப்ஸல் தன் மனைவியர் பிறர் கையில் சிக்காதிருக்க அவர்களெல்லோரையும் கொன்றுவிட்டதாக இக்கதை மேலும் கூறுகிறது.

இத்தகைய அப சகுனங்களால் கோபவசமாக்கப்பட்டவனாக அப்ஸல் படையெடுத்துக் கிளம்பினான். மராத்தியப் பிராந்தியங்களுள் நுழைந்தவுடன் பெரும் கொடுமைகளை இழைக்க ஆரம்பித்தான். கோயில்களை இடித்துத் தள்ளினான். ஆடு மாடுகளைக் கண்டபடி கொன்று குவித்தான். இந்தக் கொடுமைகளுக்கிடையே சிவாஜியைப் பிடித்து அடைக்க ஒரு கூண்டுவேறு நிர்மாணித்துக்கொண்டான்.

சிவாஜியின் கோட்டையில் அப்ஸல்கானின் வருகை குறித்து ஏராளமான பீதி பரவியிருந்தது. மராத்திய பிரதானிகள் அப்ஸல்கானுடன் சிவாஜி சமாதானம் செய்துகொள்வதே மேலெனக் கருதினார்கள். சிவாஜி இதற்காகக் கூட்டிய சபையிலும் இந்தக் கருத்தே தெரிவிக்கப்பட்டது. சிவாஜி சண்டை போடத்தான் வேண்டும் என்று பலமுறை பல வழிகளில் வாதாடிப் பார்த்தான். இருந்தபோதிலும் சபையினர் கருத்து மாறவில்லை.

சிவாஜியும் இந்தக் கருத்தை ஒப்புக்கொண்டிருப்பான். அப்ஸல்கானுடன் சமாதானம் செய்துகொள்ள முயற்சி செய்திருப்பான். ஆனாலும் என்றோ ஒருநாள் மராத்திய வீரர்கள் முசல்மான்களைப் போர்முனையில் பகிரங்கமாகச் சந்தித்துத்தான் தீரவேண்டும் என்ற உண்மை அவனுக்கு நன்றாகத் தெரிந்தது.

இரவு முழுவதும் சபை நடந்தது. ஆனால் எதும் முடிவு ஏற்படவில்லை. பின்னிரவில் சில மணிநேரம் தூங்குவதற்கென்று சென்ற சிவாஜி ஒரு கனவு கண்டான். அந்தக் கனவில் "போர் தொடுப்பதே மேல்" என்ற விஷயம் அவனுக்கு வற்புறுத்தப்பட்டது. திரும்பவும் சிவாஜி சபைக்கு வந்து சண்டை போட்டே ஆகவேண்டுமென வற்புறுத்தினான். வேண்டா வெறுப்பாக அவன் படைத்தலைவர்கள் அந்த முடிவை ஏற்றுக்கொண்டார்கள்.

சிவாஜி தன் அன்னையைக் கூப்பிட்டனுப்பினான். அவள் வந்து தன் தனயனின் முடிவைக் கேட்டு அதைப் பாராட்டினாள். வேறு வழி ஏதுமில்லை என்பதையும் விளக்கினாள்.

இந்த நிலையில் அப்ஸல்கானிடமிருந்து எதிர்பாராத விதமாக ஒரு தூதன் சிவாஜியிடம் வந்தான். சிவாஜிக்கு இந்த நிலை மிக்க வியப்பாயிருந்தது. சிவாஜி தனது ராஜ பக்தியை மாத்திரம் வாக்கிட்டுக் கொடுத்துவிட்டால் போதுமென்று வந்த தூதன் கூறினான். தனது சந்தேகங்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு சிவாஜி தூதனை உபசரித்தான். இந்தத் தூதன் ஒரு பிராம்மணன்

அன்று இரவு சிவாஜி அந்தப் பிராம்மணன் தங்கியிருந்த அறையில் புகுந்து அவனது கையில் தன் உயிர் இருப்பதாக மன்றாடினான். ஏதாவது ரகசியத் திட்டம் உண்டா என்று வினவினான். ஏராளமான பணம் தருவதாக வாக்களித்தான். அப்ஸல்கான் கோயில்களை அழித்த கதையை வேறு ஞாபகப் படுத்தினான். அந்தப் பிராம்மணன், சிவாஜியைத் தந்திரமாகச் சிறைபிடிக்க இருந்த திட்டத்தைக் கூறிவிட்டான்

பிராமணன் விடைபெற்றுத் தன் தலைவன் தங்கியிருந்த இடத்துக்குச்செல்லுமுன் அவனிடம் சிவாஜி ஒரு விஷயம் கூறினான். அப்ஸல்கானது வரவைக் கண்டு சிவாஜி ரொம்பவும் பீதியுற்றிருப்பதாகவும், தானே தன் இடத்தை விட்டுக் கிளம்பி பீஜபுரி முகாமுக்கு வர அஞ்சுவதாகவும், வீரன் அப்ஸல்கான் தன்னைச் சந்திக்க வரவேண்டுமென்றும் அப்ஸல்கானிடம் கூறுமாறு கேட்டுக்கொண்டான்.

அப்ஸல்கானிடம் சென்ற பிராமணன் சிவாஜி கூறியபடி விஷயத்தைத் தெரிவித்தான். மேலும் பிரதாப்கட் கோட்டைக்குக் கீழ்புறத்திலிருக்கும் இடத்தை இரண்டு வீரர்களின் சந்திப்பு ஸ்தலமாகக் கொள்ளலாமென்றும் எடுத்துக் காட்டினான். அப்ஸல் இந்த நிலையைக் கண்டு சிரித்துவிட்டுச் சரியென்று ஒப்புக்கொண்டான்.

சிவாஜி கோய்னா பள்ளத்தாக்கருகே இருந்த அந்த மலைச் சரிவில் ஒரே ஒரு நேரான பாதையை ஒழுங்குபடுத்தி வைக்கச் சொல்லி உடனே உத்திரவிட்டான். மலைச் சரிவிலிருந்த மற்ற பிராந்தியங்கள் மராத்தியருக்குத் தெரியுமே தவிர வேறெவருக்கும் விளங்காது. அப்ஸல் அந்தப் பாதையில் சென்றால், அதன் மூலமே தான் திரும்ப வேண்டும்.

சிவாஜியின் வீரர்கள் ஏராளமாக சூழ்புறத்திருந்த புதர்களில் மறைந்திருந்தார்கள். ஆனால் இது யாருக்கும் தெரியாது.

(15-ம் பக்கம் பார்க்க)

பட்டு, நூல் சேலைகள், ஜங்கிளா, பனாரஸ் பட்டு புடவைகள் மிகவும் நூதன பார்டர்களில் கிடைக்குமிடம் :

கல்யாணகாலம் ! கைராசி !! நாணயம் !!!

M. N. நாகேந்திரம் சன்ஸ்,

மலைவாசல், தெப்பகுளம் P. O. திருச்சி.

விளம்பரங்கள்

14 ஆண்டுகளாக வாரந்தோறும் தவறாது பிரசுரமாகி பதினாயிரக் கணக்கான தமிழ் மக்களை மகிழ்விக்கும் "சிவாஜி" உங்கள் வர்த்தகத்திற்கு ஏற்ற விளம்பர சாதனம். விகிதங்கள் மிகக் குறைவு

சிவாஜி

ஆசிரியர் :— திருலோக சீதாராம்

கோட்டை	திருச்சி, 1—5—49	முற்றுகை
14	விரோதி-ளு சித்திரை-மீ, 19-உ	22

"சிவாஜி" சந்தா

ஆண்டு 1-க்கு ரூ. 7 0 0

ஆறுமாதம் ரூ 3 8 0

சிறுவர் மலர் உட்பட தனிப்பிரதி 2 அணா

சிறுவர் மலர் மட்டும் தனிப்பிரதி 1 அணா

ஆரூர்த் திருவிழா

வளரும் தமிழ் [1]

திருலோக சீதாராம்

"இவையெல்லாம் எரித்துவிட வேண்டியவை" என்று நூல்களின் பட்டியல் ஒன்றை முன்பொருசமயம் என்னிடம் காட்டினார் பேரறிஞர் ஜி. டி. நாயுடு. அத்தனையும் தமிழ் நூல்கள். எனக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருந்தது. அவற்றை எரிக்கவேண்டுமென்று சொல்லுகிறாரே என்றல்ல. போற்றிக் காக்க வேண்டிய நூல்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவையாகத்தானே இருக்கின்றனவென்று. அவர் குறிப்பிட்ட நூல்களை எரிக்காமல்தான் வைத்திருக்கிறார். அவை எரித்துவிடத் தக்கவைதான் என்பதைக் காட்டுவதற்காக.

கடல் கொண்டதுபோகக் கரையான் தின்றதுபோக மிகுந்த சிலவற்றை ஆறுமுக நாவலர், டாக்டர் சாமிநாதய்யர்போன்ற அறிஞர்கள் அரும்பாடு பட்டுச் சேகரித்துப் பதிப்பித்த ஒரு சில இலக்கியங்கள்தான் தமிழ் மொழியின் பெருமையை, அதன் தொன்மையை, தமிழ் மொழியில் அனாதி காலம் தொட்டுத் தோன்றி வளர்ந்த நாகரீகத்தை நமக்குக் குறிப்பாலுணர்த்துகின்றன.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று எக்களித்துப்பாடிய பாரதியார்கூட நம்மை எட்டுத்திக்கும் சென்று "கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்" என்று ஏவுகிறார் : நாம்வறிஞராகிய இழிநிலைக்கிறங்கி.

உலகத்தில் ஏனைய இடங்களில் நாகரீகம் பிறக்காத இருட்காலத்தில்கூட அறிவொளி வீசித் திகழ்ந்த நம்முடைய நாகரீகம் சரித்திரம் ஒப்புக்கொண்ட உண்மை. ஆயினும் நம்முடைய தாய்மொழியில் இன்றைய புத்துலகக் கருத்துக்கள் பேரிலக்கியங்களாக-பெரும் நூல்களாக வடிவு கொள்ளாதது இழிவுதரக்கூடியதுதான். காரணம் இடைக்காலத்து நமது அடிமை வாழ்வு. அரசியல், மொழி, நாகரீகம் அனைத்திலும் தான்.

மேலை நாகரீகம் நம்மீது புயல் வீசி வந்தபோது நமது எண்ணங்கள், ஆராய்ச்சிகள் அறிவு யாவும் அன்னிய மொழித்தேரேறியே வந்தன. விழிப்புற்ற பின்னரும், தாய் மொழியைப் பேணி வளர்க்கும் அறிவு தோன்றிய பின்னரும்கூட நம்மவர் தங்கள் எண்ணங்களைத் தாய் மொழியில் வெளியிடக்கூடவில்லை. இன்றைய எழுத்தாளர் பலர் ஆங்கிலத்தில் எண்ணியே தமிழில் எழுதுகின்றனர் என்பது பொய்யல்ல. கல்விச் சாலைகளில் கருவி மொழியாகத் தமிழ் மொழி கையாளப்படும் காலம் வந்திருப்பதால் இனி உலகியலின் பல் துறை அறிவும் பயனும் தமிழில் தோன்றித் தழைக்குமென்பது உறுதி

"தமிழ் வளர்ச்சிக் கழகம்" என்ற பெயரை அன்னியர் கேட்டால் நகைப்பர். "தமிழ் இன்னும் வளரக்கூடிய நிலையில்தானா இருக்கிறது— இதுவோ மிகமிகத் தொன்மை வாய்ந்தமொழி!" என்று உசாவுவர்.

தமிழ் மொழி வளர்ந்து வடிவு கொண்ட முதுமொழி. ஆயினும் தமிழ் மக்கள் அந்த மொழியில் எண்ணங்கொள்ள, பேச, எழுத இனி முயற்சித்தாகவேண்டியிருக்கிறது என்பதுதான் உண்மை.

திருவாரூரில் நடைபெற்ற தமிழ்த் திருநாள அழைப்பைக் கண்டதும் எல்லையற்ற மகிழ்ச்சியும் நம்பிக்கையும் உண்டாயின. பழந் தமிழ் இலக்கியப் பெருமையைப் பலபட விரித்துப் பகர்ந்து விஞ்சைகள் புரிந்து கலைந்துவிடும் பொழுது போக்குக்கூட்டம் இதுவல்லவென்பதும், பொருளாதாரம் விஞ்ஞானம்போன்ற துறைகளில் புதிய எண்ணங்கள் தமிழில் முளைகொள்ளச் செயலாற்றும் செந்தமிழ்த் தொண்டர் திருக்கூட்டமே ஆரூரான் சந்நிதியில் நடைபெறப் போவதென்பதும் அறிந்து பெரும் ஆவலுடன் புறப்பட்டோம்

ஃ ஃ ஃ

நீடாமங்கலத்துக் கருகில் எங்கள் பிரயாணம் நள்ளிரவில் தடைப்பட்டு நின்றது.

கோவையிலிருந்து இரண்டு கார் நிறைய இலக்கிய நண்பர்களை அழைத்துக்கொண்டு முதல் நாளே திருச்சியில் முற்றுகையிட்டுவிட்டார் நண்பர் திருஞான சம்பந்தம். மதுரையிலிருந்து தினசெய்தி காரியாலயத்து முருகன், அதற்கும் முதல் நாளே "சிவாஜி" மாளிகையின் விருந்தினராக வந்து இறங்கியிருந்தார். கிராம ஊழியன் ரெட்டியார் தன்னுடையபழைய புகைப்படக் கருவியை வெற்றிலைச் செல்லமாக உருமாற்றி வைத்து அனைவரையும் வரவேற்றார். இப்படியாகத் தமிழ்த் திருநாள் திருச்சியிலேயே தொடங்கி இலக்கிய யாத்திரை திருவாரூரை நோக்கி முதல் நாள் இரவு புறப்பட்டது.

நீடாமங்கலத்துக் கருகில் எங்கள் கார்களில் ஒன்று பின்சக்கரம் லாடம் அடித்துப் பெருமூச்சுவிட்டு ஓய்ந்துபோயிற்று. நள்ளிரவில் ஒரு அரை மணி நேரம் சக்கரம் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் தொடங்கினோம். ஆற்றங்கரைமீது வளைந்து வளைந்து பதினெட்டு மைல்கள் கொடி வித்தைகள் புரிந்து சென்று. கமலாலயக் கரையில "நங்கூரம்" போட்டோம், அந்த அர்த்த ராத்திரியில் ஆரூர்த் தெருக்களில் மின்சார ஒளிப் பரப்பில் தமிழ்த் தோரணங்களைக் கட்டிச் சிங்காரித்துக் கொண்டிருந்தார்கள். ஹைஸ்கூல் கட்டிடத்தில் ஜில்லாவாரியாக அறைகள் விருந்தினருக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மதுரை, கோவை, திருச்சி மூன்று ஜில்லாக்களை ஐக்யமாக்கி ஒரு யூனியனாகியிருந்த நாங்கள் ஆரூரில்போய் ஜில்லாஸ்தான ஏற்பாடுகளுக்கு இணங்க மனம் வரவில்லை யாரும் வராத செங்கற்பட்டு ஜில்லாவை ஐக்ய மூன்று ஜில்லாக்காரர்களாகிய நாங்கள் தாற்காலிகமாக ஆக்ரமித்துக்கொண்டோம். கோவை, மதுரை, திருச்சி அறைகளை மறுநாள காலை நாங்கள் பார்வையிட்டபோது இலக்கிய வாதிகளல்லாத பார்வையாளர்கள் யார்யாரோ இருந்தார்கள்.

"கொசுவலை எங்கே" என்றார் திருஞானம். "கொசுவலை கொண்டுவரவில்லை, கொசு ஒரு டப்பி நிறையப் பிடித்துவைத்திருந்தேன். புறப்பட்ட அவசரத்தில் எடுத்துவைக்க மறந்துவிட்டேன்" என்று கூறி வருத்தப்பட்டார் நண்பர் ரெட்டியார். வரவேற்புக் கழகத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி அனைவரும் கொசுவலை கொண்டு வந்துவிட்டால் கொசுவுக்கு எங்கே போவது என்ற முன்யோசனையுடன் அவர் கொசுவைப்பிடித்து வைத்திருந்தார் போலும். நல்லவேளையாக அவருடைய காமிராவுக்குள் கொசு ஒன்றுமில்லையென்று அறிந்து சற்று நிம்மதி அடைந்தோம்.

காலையில் கண்விழித்தபோது ஒவ்வொருவர் படுக்கையிலும் தலைமாட்டில் ஒவ்வொரு காகித மடிப்பு இருந்தது. தொண்டர்கள் வைத்துவிட்டுப்போன பற்பொடி! கீழேயிறங்கி வந்தால் தனித்தனி அறைகளில் வெந்நீரும் தண்ணீரும் குளிப்பதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தன. கிணற்றிலிருந்து ஆட்கள் நீர் இறைத்துக் கொண்டுபோய் கொட்டிய வண்ணம் இருந்தார்கள். குளித்துப் புது ஆடை பூண்டதும், விருந்தினர் அனைவரையும் அவரவர் அறைகளில் வந்து பார்த்து அடையாள விருதுகள் கொடுத்துக்காலை உணவுக்கு அழைத்துச் சென்றார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

பித்தளை, தாம்பூரம், வெண்கலம் அலுமினியம், எவர் சில்வர் பாத்திரங்கள் உத்திரவாதமுடன் கிடைக்குமிடம்

திருநெல்வேலி பாத்திரக்கடை

பெரியகடைவீதி - திருச்சிராப்பள்ளி - [H.O. திருநெல்வேலி டவுன்]

Propts: S.V. கந்தசுவாமி பிள்ளை சன்ஸ்

அனுபவ ஞானியின் குறிப்புகள்



திருலோக சீதாராம்

அமெரிக்கப் பத்திரிகைகளில்

தேவன் போர்ட் என்னும் இடத்தில் தமிழ் மகனை நாயுடு தன் இயல்பான உடையுடன் தெருக்களில் நடமாடியதன் காரணமாக அவருக்குச் சிறு சங்கடம் ஒன்று விளைந்தது.

மூலகச்சமும், சொக்காயும் மேல் துண்டும் அணிந்திருந்த அவரைக் கண்ட அமெரிக்கப் பெண்மணிகள் சிலர், அருவருக்கத்தக்க ஆடைகளில் ஒரு அன்னிய மனிதன் தெருக்களில் திரிந்து தங்கள் அழகுணர்ச்சியைப் புண்படுத்துவதாகப் போலீஸாரிடம் முறையிட்டுக் கொண்டார்கள்.

போலீஸார் நாயுடுவை உடனே கைதுசெய்து கொண்டு போய் விட்டனர். காரணத்தை உணர்ந்த நாயுடு புன்முறுவலுடன் போலீஸாருடன் சென்றார். பிறகு போலீஸார் உண்மையை உணர்ந்ததும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவரை விடுவித்தனர். இந்த சம்பவம், அதே நகரத்தில் நாயுடு அவர்கள் ஆற்றிய சொற்பெருக்கொன்றின் பொருளாக அமைந்தது. 16 மில்லி மீட்டர் காமிராவைக் கண்டு பிடித்த அமெரிக்கரான அலெக்ஸாண்டர் விக்டர் என்பவருடன் நாயுடு சந்தித்து அளவளாவியிருந்த காக்ஷியைப் படம் பிடித்துப் பிரசுரித்த "டெய்லி டைம்ஸ்" என்ற பிரபல ஆங்கில தினசரிப் பத்திரிகை தேவன் போர்ட் போலீஸாரின் தவறையும் அமெரிக்கப் பெண்களின் அறியாமையையும் குறிப்பிட்டுப் பின்வருமாறு எழுதிற்று.

"மேலேயுள்ள படத்தில் அலெக்ஸாண்டர் விக்டர் என்ற அமெரிக்க விஞ்ஞானியையும் இந்திய விஞ்ஞானியான திருவாளர் ஜி. டி. நாயுடு அவர்களையும் காணலாம். அலெக்ஸாண்டர் விக்டர் 16 மில்லி மீட்டர் காமிராவைக் கண்டுபிடித்தவர். நாயுடு அவர்கள் மின்சாரத்தினுல் இயங்கும் சவரக் கத்தியைக் கண்டுபிடித்தவர். நாயுடு தானே தயார் செய்த சவரக் கத்தி வேலை செய்யும் விதத்தை அலெக்ஸாண்டர் விக்டருக்கு விளக்கிக் காட்டியதுடன் ஒரு கத்தியைப் பரிசாகவும் அளித்திருக்கிறார். இந்தக் கத்தியின் பிடியில் மின்சாரப் பெட்டி (பாட்டரி) மிகத் திறமையுடன் பொதிந்து வைக்கப்பட்டிருக்கிறது. முகத்தில் கத்தி வைத்து அதை நகர்த்த ஆரம்பித்தவுடன் கைப்பிடியில் இருக்கும் பாட்டரி வேலை செய்து வேண்டிய மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்ளுகிறது. உடனே அதில் இருக்கும் மோட்டார் வேலை செய்ய ஆரம்பிக்கிறது. அதன் வேகத்தால் கத்தி சவரம் செய்யத் தயாராகிவிடுகிறது. இவ்வளவு ஏற்பாட்டையும் மிக மிக நுண்ணிய முறையில் ஒரு சவரக் கத்தியில் இணைத்திருக்கும் சாதனை வியக்கத்தக்கது.

"தேவன் போர்ட்டுக்கு வந்திருக்கும் நாயுடு கோயம்புத்தூரில மிகப் பெரிய கைத்தொழில் கல்விச்சாலை ஒன்றின் தலைவர். இவர் தேவன் போர்ட் நகரத்தில் உடைகளைப்பற்றி அரிய சொற்பெருக்கு ஒன்றை நிகழ்த்தியிருக்கிறார். ஒரு வாரம் தொடர்ந்து தன்னைப் போல் வேட்டி கட்டிக்கொண்டு பார்த்தால் இறகிய வேறு உடைகளை அமெரிக்கர் விரும்பமாட்டார்களென்று அவர் குறிப்பிட்டார். இந்திய நாகரீகததில் ஆடைகளைப் பற்றிய அவர் பேச்சை தேவன் போர்ட் போலீஸார் கேட்டு மிகுந்த பயன அடைந்திருப்பர் என்று நம்புகிறோம். ஏனெனில் அவருடைய ஆடையை வெறுத்துச் சில பெண்கள் செய்துகொண்ட முறையீட்டைக் கேட்டு அவரைப போலீஸார் கைது செய்தார்கள். நாயுடு அவர்களின் பேச்சு போலீஸாருக்கு நல்ல "அறவுரை"யாக இருக்குமன்றோ? 100 டிக்ரிக்கு மேற்பட்ட சூடு மிகுந்த இடங்களில் இறக்கிய கால் சட்டைகளும் மேலங்கிகளும் அணிந்திருப்போர் அநேகமாக ஆடைகளுக்கிடையில் சிறைப்பட்டுக் கிடப்பதாக அவர் எடுத்துக் காட்டுகிறார்."

1940-ம் ஆண்டு ஜுலை 26-ந் தேதி இதழில் டைம்ஸ் பத்திரிகை எழுதிய குறிப்புதான் மேலே கொடுத்திருப்பது.

அதே ஆண்டில் ஆகஸ்ட் இருபதாம் தேதியன்று "சால்ட்லேக்" என்ற நகரத்திலிருந்து வெளியாகும் "தி டெசரட் நியூஸ்" என்ற பத்திரிகையில் நாயுடு அவர்களைப்பற்றி நீண்ட குறிப்பொன்றும் அவருடைய புகைப்படமும் வெளியாயிற்று.

"இந்திய மோட்டார் மன்னன் அமெரிக்க அனுபவத்தைச் சேகரிக்கிறார்" என்ற தலைப்பில் வெளியான அந்தக் குறிப்பின் சாரம் பின்வருமாறு:—

"இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய தேசங்களில் சுமார் ஒரு ஆண்டுக்கு மேலாகச் சுற்றுப் பிரயாணம புரிந்து தாய் நாடு திரும்பும் வழியில, கோயம்புத்தூர் யுனைடெட் மோட்டார்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தைச் சேர்ந்த மோட்டார் மன்னன் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் இன்று "சால்ட்லேக்" நகரத்தின் விருந்தினராகத் தங்கியிருக்கிறார். போக்குவரத்துத் துறையில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அவர் சாதித்துள்ளவை பாராட்டுக்கும் பின்பற்றுதலுக்கும் உரியன. நாற்பத்தாறு ஆண்டுகள் நிரம்பிய திருவாளர் நாயுடு, ஒற்றைப் பஸ்ஸுடன் தன்னுடைய ஸ்தாபனத்தை ஆரம்பித்தவர்.

"இப்பொழுது அவருடைய நிருவாகத்தின் கீழ் 280 பஸ்கள் இந்தியாவில் ஓடுகின்றன. இத்தனை பஸ்ஸுகளையும் ஓட்டும் ஒன்பது கம்பெனிகள் இவர் ஒருவருடைய தலைமையில் இயங்குகின்றன. இவை தவிர ஒரு யந்திரத் தொழிற்சாலையும், மின்சாரத் தொழிற்சாலை ஒன்றும், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகமும் இவர் நடத்திவருகிறார். கம்பெனிகளில் வேலை செய்யும் யாரையும் நிர்வாகக் குழுவினரின் அனுமதியின்றி வேலையிலிருந்து நீக்க இவருக்கு அதிகாரமில்லாத ஜனநாயக ஏற்பாடுகள் உண்டு. ஆயினும் மோட்டார் வண்டியின் சக்கரங்கள் தவிர வேறு எந்தப் பாகமாவது வேறு எந்தப் பொருளின் மீது மோதினாலும் அந்த வண்டியின் சாரதியை உடனே வேலையிலிருந்து நீக்கும் கண்டிப்பான அதிகாரப் இவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக இவருடைய ஸ்தாபனத்தில் இருக்கும் மோட்டார் வண்டிகளினுல் விபத்துக்கள் என்பதே இல்லாத நிலை ஏற்பட்டிருப்பது மெச்சத் தக்கது. பத்துலக்ஷம் மைல் ஓடும் வரையில் கூட ஒரு வண்டி எதிரே எங்கும் இடித்துக் கொள்வதில்லையென்று தெரிகிறது. ஜன நடமாட்டமும் வளைவுகளும் நிறைந்த இந்திய ரோட்டுகளில் இது மிகப்பெரும் வெற்றிதான்.

"நாயுடு தானே முயன்று படித்துக்கொண்ட ஒரு மேதை. அமெரிக்காவில் அவர் பலப்பல இடங்களுக்கும் சென்று அனுபவ ஞானம் படைத்திருக்கிறார். கண்காக்ஷிகள், வர்த்தகசாலைகள் ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டும் படங்கள் எடுத்துக்கொண்டும் சொற் பெருக்குகள் ஆற்றியும் புள்ளி விபரங்கள் திரட்டியும் நூல்கள் பிரசுரங்கள் சேகரித்தும் அவர் திரும்புகிறார். இவையெல்லாம் இந்தியாவிலுள்ள அவருடைய கல்விச்சாலைகளின் உபயோகத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தன் முயற்சியினுலேயே அவர் ஈட்டும் பொருளெல்லாம் கல்வித் துறைக்கே ஈடுபடுத்தும் கலைஞர் அவர்.

"நாயுடு ஒரு ஹிந்து. சைவ முறை உணவு கொள்ளுகிறார். அமெரிக்க ஏழை ஒருவனுடைய அன்றாட இன்றியமையாத் தேவைகளைக்கூட அவர் வீண் ஆடம்பரமென்று கருதுகிறார். தனக்கு ஒரு நாளைக்கு ஒரு டாலர் இருந்தால் போதுமென்பது அவர் வாழ்க்கைச் செலவுக் கணக்கு. தனக்கென்று அவர் உபயோகிக்கும் சாமான்களும் ஆடைகளும் மிகமிகச் சொற்பமேயானுலும் அவர் ஊருக்கு எடுத்துச் செல்லும் சாமான்களின் எடை ஏழாயிரம் பவுண்டு இருக்கிறது. அத்தனையும். புஸ்தகங்கள், சினிமாப் படங்கள், புகைப்படக் கருவிகள். ஆகியவையேயாகும். 1932-ல்

கோடிக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்று வருவது
வீல்மார்க் சென்னீஸ் வைரங்கள் & விக்டரி ஸ்டார் வைரங்கள்
தயாரிப்பவர்:— சென்னி ருதாகிருஷ்ணன், பெரியபஜார், திருச்சினுப்பள்ளி.

அவர் ஹிட்லருடனும் அவருடைய தோழர்களுடனும் சல்லாபித்திருந்தபோது எடுத்த படம் ஒன்றில் ஹிட்லரின் கையெழுத்தையும் வாங்கி வைத்திருக்கிருர். இது ஒரு அபூர்வமான பொருள். உலகமெங்கிலும் அவர் சென்று பழகிய நகரங்களைப் பற்றிய புள்ளி விபரங்களை டைப் அடித்த பெருங்கோவை ஒன்றும் அவரிடம் உள்ளது. அது மட்டும் சுமார் நூறு பக்கங்களுக்கு மேலிருக்கும். இங்கிருந்து சான்பிரான்ஸிஸ்கோ வழியாக அவர் இந்தியாவிற்குப் புறப்படுகிருர்.''

தேயிலைக் குரங்கு

இதென்ன புதுக்குரங்கு என்று வியப்படைகிறீர்கள் அல்லவா? மனிதக்குரங்கு போல தேயிலைக் குரங்கு என்று ஒரு வகை கிடையாது. அண்மையில் சைனுவிலிருந்து இங்கிலாந்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேயிலைப் பெட்டிகளின் மீது **"தனி ரகமான தேயிலை—குரங்குகளாலேயே பொறுக்கப்பட்டது"** என்று சீட்டுகள் ஒட்டப்பட்டிருந்தன.

ஆம், உண்மையிலேயே தேயிலைத் தோட்டங்களில் குரங்குகள் கொழுந்தெடுக்கும் வழக்கம் நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. காரணம் செஞ்சரிவான மலைச் சாரல்களில் சில இடங்களில் தேயிலை பயிராகிறது. மேலேயிருந்து நூல் ஏணிகளின் வழியாக, இதற்கென்று பயிற்றுவிக்கப்பட்ட குரங்குகளின் கழுத்தில் கூடைகளைக் கட்டி மலைச்சரிவில் தோட்டக் காடுகளில் இறக்கிவிடுவார்கள். கீழே சென்ற குரங்குகள் தேயிலைக்கொழுந்தைக் கிள்ளி கூடையில் நிரப்பிக்கொண்டு மேலே சேர்க்கும். அவை திரும்பிய பின் அவற்றிற்குக் கூலி என்ன தெரியுமா? பட்டாணிக்கடலை!

"ஆஹா, எவ்வளவு பெரிய பாண்டம்!..."



விருந்தில் கூட்டம் அதிகமாகத் தானிருக்க வேண்டும்! ஆனால் பாண்டத்திலே இரண்டொரு சிமிட்டா தேயிலையே காண்கின்றது, ஆகவே டீ நீர் பெருகியதாயும் ருசியற்றதாகவுமே இருக்கும். நல்ல டீ தயாரிக்க நபர் ஒன்றுக்கு ஒரு முழு தேக்கரண்டி விதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் தேயிலை உபயோகிக்க வேண்டும்.

கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சிபெறுவதற்கு டீ அருந்துகிருர்கள். ஆனால் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்னதென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்கவிஷயம். நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிகச் செலவும் கிடையாது. ஐந்து சுலபமான விதிகளை பின்பற்றினுல் போதும். உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் தேயிலை பானம் நறுமணம் ததும்பியிருக்கவும் இவ்விதிகளை உங்கள் மனதில்பதிய வைத்து, எப்போதும் வீட்டில் இவ் விதிகளைப் பின்பற்றச் செய்வது அவசியம்.

ஐந்து சுலபமான விதிகள்

1. புதியதாக எடுத்ததும் புதிதாகக் கொதித்ததுமான நீரையே உபயோகிக்கவும். 2. உபயோகிக்கும் முன் பாண்டத்தை வெதுவெதுப்பாக்கவும். 3. நபர் ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி விதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் நல்ல தேயிலை உபயோகிக்கவும். 4. தேயிலை கஷாயம் உபயோகிக்கும் முன் 3 முதல் 5 நிமிஷம் நன்கு ஊறவேண்டும். 5. பாலைக் கோப்பையில் சேர்த்துக்கொள்ளவும்—பாண்டத்தில் வேண்டாம்.

"தேயிலைப் பானம் - சில யோசனைகள்" என்ற இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி, உருது, அல்லது தமிழ் பாஷையில் கிடைக்கும். இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101 நேதாஜி சுபாஷ் ரோட், தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா என்ற விலாசத்துக்கு விண்ணப்பித்துப் பெறலாம்.

நன்கு தயாரித்த டீ யைப் போன்றது வேறேதுவுமல்ல.



இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK.297 T.M

அரியலூர் டி. மு. கோர்ட்டு

O. S. 32/49

கிளிமங்கலம் செங்கமுத்து படையாச்சி —வாதி

கிளிமங்கலம் கோவிந்தம்மாள் —பிரதிவாதி

வாதிக்குப் பிரதிவாதியால் 1—10—45-ல் ரூபாய் 300-க்கு எழுதிக்கொடுக்கப் பட்டிருக்கும் பந்தகபத்திரப்படி ரூ. 359-0-4 கிடைப்பதற்கு வாதியால் பிரதிவாதியின் பேரில் இந்த தாவா தொடரப்பட்டு 13-6-49 ல் விசாரணை வைக்கப்பட்டிருக்கிறது.

R. Ramaswami,
Advocate for Plaintiff.
25—4—49.



லிப்டன்ஸ்

என்றால் முதல்தரமான டீ

LTK-127 G TM

கலியாண காலங்களுக்குத் தேவையான எல்லாவிதமான பட்டு ஜவுளிகளுக்கும்

பாபு இண்டஸ்ட்ரீஸ்

பிராஞ்சு :— "பாபு ஹால்" சைனுபஜார் ரோடு, திருச்சி.

Slate Manufacturers &
பட்டு ஜவுளி வியாபாரம்
டவுன் ஸ்டேஷன் ரோட்
திருச்சிராப்பள்ளி

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கேன்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினேம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 1—5—49

யாருக்கு வெற்றி

“காமன் வெல்த்” மகாநாட்டில் இந்தியா சம்பந்தமாகப் புதிய ஏற்பாடு ஒன்றை முடித்திருக்கும் நமது பிரதமரின் செயலைப்பற்றி இன்று உலகமெங்கும் பேசுகிருர்கள். இந்தியாவுக்கு இது ஒரு வெற்றி என்று பெரும்பாலான ராஜதந்திரிகளும் நாடுகளும் கூறுகின்றனர். இது பிரிட்டிஷ் ராஜதந்திரத்திற்கு மற்ருெரு வெற்றி என்று ரஷ்யாவும் நமது நாட்டு சோஷலிஸ்ட்களும் கருதுகிருர்கள்.

இதை நாம் நன்கு சிந்திக்க வேண்டியது தான். “காமன் வெல்த்” என்று கூறப்படுவதன் பொருள் “கூட்டு நலவுரிமை” என்பதாகும். முன்பு இது “பிரிட்டிஷ் காமன் வேல்த்” என்று அழைக்கப்பட்டது. அதாவது பிரிட்டிஷ் மன்னரின் தலைமையின் கீழ் அவருடைய ராஜப் பிரதிநிதிகளை அரசியல் தலைவராகக் கொண்டு, ஆனல் அந்தந்த நாட்டுப் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி சபைகளின் சுதந்திரமான ஆட்சியில் நடைபெறும் நாடுகளின் கூட்டுறவுச் சங்கம் என்ற பொருள்.

இனியும் கூட இந்தச் சங்கத்தின் ஏற்பாடுகளும் அடிப்படையும் அப்படியே இருக்குமானலும் பிரிட்டிஷ் காமன் வெல்த் என்ற பெயர் எடுபட்டுப் போய் விட்டது. இனி சாதாரணமாக “காமன்வெல்த்” என்றே இது வழங்கப்படும். இந்தக் கூட்டுறவு முறையில் சம்பந்தப்பட்டுள்ள நாடுகள் எட்டு. பிரிட்டன், கானடா, ஆஸ்ட்ரேலியா, நியூஜிலாந்து, தென் ஆப்பிரிக்கா இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகியவையே.

நேரு லண்டனில் நடைபெற்ற இந்த சங்கத்தின் மகாநாட்டுக்குச் சென்று இந்தியா பற்றிய வரையிலும் புதிய முறை ஒன்றை ஏற்படுத்தி அனைவரையும் அதை ஒப்புக்கொள்ளச் செய்திருக்கிருர்.

இந்தப் புதிய ஏற்பாட்டின்படி இந்தியா இனியும் காமன் வெல்த்தில் தொடர்ந்து அங்கம் வகித்து வரும். ஆனல் மற்றைய ஏழு நாடுகளில் பழைய முறைப்படியே பிரிட்டிஷ் மன்னரையே அவை தங்கள் மன்னராக ஏற்றுக்கொண்டபோதிலும் இந்தியா மட்டும் பிரிட்டிஷ் மன்னரை தன் மன்னராக ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. இந்தியாவின் அரசியல் தலைவர் இனி தேர்ந்தெடுக்கப்படும் ஜனதிபதியே. கவர்னர் ஜெனரல் என்ற பதவியோ, பிரிட்டிஷ் மன்னருக்கு இந்திய அரசியல் நிர்வாகத் தொடர்போ இனி இராது. மற்றைய நாடுகளுடன் காமன் வெல்த் நாடுகள் செய்து கொள்ளும் எந்தத்தொடர்பிலும் மன்னரின் முத்திரை இருக்கும். ஆனல் இந்தியா விஷயத்தில் இந்த முத்திரை செல்லாது.

இவ்வளவு பேதம் இருந்தாலும் கூட தொடர்ந்து “காமன் வெல்த்” ஏற்பாட்டில் இந்தியா இருந்துவர உரிமையுண்டு என்பதை மற்ற ஏழு நாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

காமன் வெல்த் நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் உள்ள நட்புச் சலுகைகள் இந்தியா விஷயத்திலும் இருக்குமே யல்லாது பிரிட்டிஷ் மன்னருக்கு இந்தியாவின் மீது எந்த ஆதிக்கமுமில்லை.

இந்த ஏற்பாட்டை ஆதரிப்பவர்கள் ஏகாதிபத்ய உறவு முறை நமக்கு, நம்முடைய பொருளாதார வாணிபத் துறையில் வேண்டியதுதான் என்கிருர்கள். எதிர்ப்பவர்கள் இந்தியாவின் குடியரசு ஏற்பாட்டை மதிப்பதன் மூலம், பழைய ஏகாதிபத்திய சலுகைகளைப் பிரிட்டன் இந்தியாவில் உறுதிப்படுத்திக் கொண்டிருப்பது நமது பொருளாதார, வாணிப அடிமைத்தனத்தை இன்னும் அதிகமாக்குகிறதென்று கருதுகிருர்கள். இந்தக் கருத்தை அப்படி எளிதாக நாம் அலட்சியப்படுத்தி விடுவதற்கில்லை. ஆயினும் “காமன் வெல்த்” அமைப்பில் இது பெரிய மாறுதலென்பதும், வருங்காலத்தில் இந்த சிறு உறவு கூட இல்லாத நிலைக்கு நாம் உயர வழி பிறக்கும் என்பதையும் நாம் நம்பலாம்.

புதிய வாழ்வின் தொடக்கத்தில் மிகப் பெரும் பொறுப்பை ஏற்று இரவு பகல் ஓயாது தேச தேசங்கள் அலைந்து பணி புரியும் தலைவர்களை நம்பி வேலை செய்வது அவசியந்தானல்லவா ?

✱

கன்னித் தமிழ் வளர்க்க கம்பர்கழகம்

சென்னை நகரில் சென்ற ஆறு ஆண்டுகளுக்கு மேலாகக் கம்பர் கழகம் தொண்டாற்றி வருகிறது. எழும்பூர் திரு. க. சோமசுந்தரத்தின் முயற்சியினல் அமைக்கப்பெற்ற இக்கழகம் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள தமிழ்ப் புலவர்கள், தமிழன்பர்கள் பலருடைய அன்பையும் ஆதரவையும் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது. புதிய தமிழ் ஆண்டில் தமிழகத்துக்கும் பொதுவான அமைப்புடன் கம்பர் கழகம் அரசாங்கச் சட்ட முறைப்படி பதிவு செய்யப்பட்டது.

கம்பர் நூல்களைப் போற்றி வளர்த்தல், பரப்புதல், அதற்கென விழாக்கள் நடத்துதல், கூட்டங்கள், வகுப்புக்கள், நாவன்மைப் பயிற்சிக்கூடங்கள் நடத்துதல், கம்ப ராமாயண அடக்க விலைப்பதிப்புகள் வெளியிடுதல் முதலியவை கம்பர் கழகத்தின் முக்கிய வேலைத்திட்டங்கள்.

கழகத்தின் முதலாவது செயற்குழு பத்திரிகையாளர், எழுத்தாளர், தமிழ் அன்பர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. விவரம் பின் வருமாறு:—

தலைவர்: ரா. கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர், “கல்கி”. உபதலைவர்கள்: டி. எம். சின்னையா பிள்ளை, தலைவர், ஹிந்துமத தர்ம பரிபாலனபோர்டு. கி. வா. ஜகந்நாதன், ஆசிரியர் “கலைமகள்”. காரியதரிசிகள்: அ. சீனிவாசராகவன், ஆசிரியர், ‘‘சிந்தனை”. சா. கணேசன், காரைக்குடி. க. சோமசுந்தரம், எழும்பூர், சென்னை. ம. ப. பெரியசாமித் தூரன், பிரதம ஆசிரியர், “கலைகளஞ்சியம்.”

அங்கத்தினர்: திருவாளர்கள் ரா.நாராயணய்யங்கார், ஆசிரியர் “ஹிந்துஸ்தான்”. நாரண— துரைக்கண்ணன். ஆசிரியர், “பிரசண்ட விகடன்” சங்கு சுப்பிரமணியம். ஏ. ஜி. வெங்கடாச்சாரி, உதவி ஆசிரியர், “தினமணி”. ச. பாஷ்யம், உதவி ஆசிரியர், “சுதேசமித்திரன்”. நீலாவதி ராமசுப்பிரமணியம், சென்னை. ஆர். ஆர். தளவாய், திருவல்லிகேணி ஏ. எஸ். ஞானசம்பந்தம், ராயப்பேட்டை. ஜே. எம். சோமசுந்தரம், சென்னை. ம. ராதாகிருஷ்ண பிள்ளை, சென்னை. ஆர். ராஜரத்தினம் அம்மாள், திருவல்லிக்கேணி. வி. ஏ. அருள்ராஜ், புதுப்பேட்டை. ஆர். கணேசன், திருவல்லிக்கேணி. திருலோக சீதாராம், ஆசிரியர் “சிவாஜி”.

தமிழ் நாட்டிலும், வட நாட்டிலும் உள்ள தமிழ் வளர்க்கும் ஸ்தாபனங்கள் எல்லாவற்றுடனும் கம்பர் கழகம் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புகிறது. தமிழ்ச் சங்கங்களும் வள்ளுவர், கம்பர், பாரதி முதலிய கவிஞரின் பெயருடன் விளங்கும் சங்கங்களும் அந்தந்தச் சங்கங்களைப் பற்றிய அறிக்கைகளையும் மற்ற விவரங்களையும் கம்பர் கழகத்தின் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்கக் கோருகிறேன். கம்பர் கழகக் காரியாலயத்தின் விலாசம். காரியதரிசி, கம்பர் கழகம், 8 சின்ன செட்டித்தெரு, சென்னை.

கம்பர் கழகத்தில் அங்கத்தினராகச் சேரும்படி நாடெங்குமுள்ள தமிழன்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். கழகத்தின் ஆயுள் சந்தா ரூ. 25. ஆண்டு சந்தாவை பின்வரும் விலாசத்துக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன். திரு. எம். பி. பெரியசாமித்தூரன், 10, கான்ரான் ஸ்மித்ரோடு, கதீட்ரல், சென்னை.

—ரா. நா.

✱

அயர்லாந்தில் நேருஜி

சம்பிரதாயங்களை மீறிப் புது வழிகள் வகுக்கும் ஆற்றல் படைத்த நமதுமாபெருந்தலைவர் நேரு, லண்டன் மகாநாட்டை முடித்துக்கொண்டு அயர்லாந்து சென்ருர். இதுவரை இல்லாத புது வழக்கமாக அங்கு அயர்லாந்து பார்லிமெண்டில் சபாநாயகருக்கு அருகே நேருவுக்கு சமஆசனம் கொடுத்து ராஜோபசாரம் செய்திருக்கிருர்கள். இன்றைய உலகத்தில் மிகப்பெரும் புகழ்படைத்திருக்கும் சரித்திர நாயகர் நேருஜி ஒருவர்தான்.

✱

தொடர் கட்டுரை — ஆர். டி.

கள்ளிப்பட்டியும் — வெள்ளிநிலாவும் [3]

மாலைக் காப்பி குடித்தாக வேண்டும். அதுவும் நல்ல காப்பியாக நல்ல இடத்தில் உட்கார்ந்து குடித்தாக வேண்டும்!

என்னைவிட என் குணத்தை நன்கு அறிந்தவர் தங்கவேலு! நல்ல, வெள்ளை வெளேர் என்று உடை போட்டுக் கொள்ள வேணும், குத்து விளக்குப் போன்ற குதூகலமான இடத்தில் உட்காரவேணும், தெளிந்த நீரோட்டம் போன்ற தண்ணீரோ, காப்பியோ கொண்டு வந்து வைத்தால்தான் என் மனசுக்கு நன்முக இருக்கும் என்பது தங்கவேலுவுக்கு தெளிவாகத் தெரியும். என்ன செய்வார்? அது கோபியா, கோவையா, குற்றுலமா எனக்கு வேண்டியதை வேண்டியபடி செய்ய! சும்மா சத்தியமங்கலந்தானே? பிரம்மாண்டமான அரிசிக் கட்டிடம் எனக்குப் பிடிக்காதென்று, ஒரு சின்னஞ் சிறு குடிசையோரம், மரத்து நிழலில் ஓர் கட்டிலைப் போட்டுத் தந்தார். மலைக்காற்று தாலாட்டிற்று. தென்றல் தூங்கு, தூங்கு, என்று கொஞ்சிற்று. காரைக்குடியார் என் களைப்பைப் போக்க வேடிக்கையாக என்னவோ சொல்லிக்கொண்டிருந்தார். உள்ளமோ ஓர் கவிதை இயற்றவேண்டும் என்று துடியாய்த் துடித்தது!

சில பேருக்குக் காப்பி சாப்பிட்டவுடன் உற்சாகம் கிளம்பும் என்று சொல்வார்கள். எனக்கு என்னவோ எப்போதும் உற்சாகம் தான்!

'டல்' என்ற வார்த்தைக்கோ 'மூட்' வேண்டும் என்று சொல்வார்களே, அதற்கெல்லாமோ நம்மிடம் இடமே இல்லை! பாரதி சொன்னபடி எப்போதும் பிரம்மத்திலே களிக்கும் எல்லையற்ற இன்ப நிலைதான் நம்முடையது.

ஆனால் ஒன்று. இந்த முட்டாள்தனமான உலகத்தில் முட்டாள்களோடு வாழுவதென்றால்—அது உள்ளது உள்ளபடி வாழ முடியவில்லையே என்ற ஏக்கம் தான் சில சமயம் லேசாக உள்ளத்தில் அலைவீசும். கொள்கை அளவில் நான் ஒரு கம்யூனிஸ்ட். கம்யூனிஸ்ட் என்றால் மிரண்டுகொண்டு ஓடிவிடாதீர்கள். என்னைப் பிடித்து சேர்க்க வேண்டிய இடம் சேர்க்கவில்லையே என்றும் கவலை கொள்ள வேண்டாம். மெத்தை வீட்டை எல்லாம் இடித்து விட்டு, கூரை வீடாகவோ, அல்லது கூரை வீடுகளை, மெத்தைகளாக வேய்ந்துவிட வேணுமென்றோ கனவு காண்கின்றவன் அல்ல. "இது கம்யூனிஸத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளாததினால் விளைந்த தகராறு!" என்று சொல்லலாம். எப்படியோ இருக்கட்டும் உண்மையாக 'கம்யூனிஸ்ட்' என்றால்—என்ன அர்த்தமோ அந்த அர்த்தம் தான்! உம், என்ன சொன்னேன். கொள்கையில் நான் ஒரு கம்யூனிஸ்ட், போடுவது சுத்தமான பரிசுத்தமான வெள்ளைச் சட்டை! பேசுவது நல்ல விஷயமே! வாழ்வது அசலான முதல் நெம்பரான முதலாளியைப் போல! ஆமாங்க! கார் இல்லாட்டி நமக்குச் சரிப்படாதுங்க. கட்டை வண்டிக்கும் நமக்கும் ஒத்துக்காதிங்க! இந்தச் சாப்பாட்டுச் சங்கதியும் அப்படியே. செந்நெல்லும், தேனும், கதலியும் வந்து வந்து நர்த்தனம் இடவேணும். தீத்தாரப்பன் சொன்னபடி 'அதைப் பறிமாறும் கரங்களும் மலர்க் கரங்களாக இருக்கவேணும்' நிற்க.



கோதண்டம் துணைவியும் தானும்

"அண்ணா! காப்பி ஆச்சு! இனி அடுத்தது என்ன?" என்று கேட்டேன் தங்கவேலுவிடம்.

"கோபிக்கு இரண்டு வழிகள் உண்டு! ஒன்று நேராகப் போவது, இனனொன்று தூக்க நாயக்கன் பாளையம் வழியாகப் போவது. நண்பர் சக்கரை அங்கு இருக்கிறார். என்ன சொல்கிறீர்கள்?" என்றார்.

அப்போதுதான் நண்பர் சக்கரையின் ஞாபகம் வந்தது. சக்கரை, என்றால் மதுரமாக இருக்கிறது அல்லவா? ஆம், "சக்கரையின் பெயரும் குணமும் சக்கரை,"யேதான். (இங்கு நண்பர் "தீபன்" அவர்கள் பல நாட்களுக்கு முன் எழுதிய வசன கவிதை ஞாபகத்திற்கு வருகிறது, அதாவது, "மதுரத்தின் பெயரும் நடிப்பும் மதுரம்" என்று) ஆகா! எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. இன்னொரு பொருத்தமும் இங்கு கவனிக்கத்தக்கது. நண்பர் சக்கரை அவர்களுக்கு என். எஸ். கிருஷ்ணன், மதுரம்—இருவரிடத்தும் அளவற்ற அன்பும் பக்தியும் உண்டு. மதுரமும் கிருஷ்ணனும், சக்கரையின் திருமணத்திற்கு நேரில் சென்று மிக மதுரமயமான ஆனந்தமாக்கினார்கள்.

"தங்கள் சித்தம்" என்று அண்ணாவின் கட்டளைக்கு அடி பணிந்தேன்

கார் புறப்பட்டதும், அன்பர் கோதண்டம் தம்பதிகளின் இனிமையையும், இங்கிதத்தையும் தங்கவேலு வர்ணிக்க ஆரம்பித்தார். வர்ணனை என்றால், உள்ளதின் உயர்வை என்று கொள்க. அண்ணாவின் பேச்சு ஆனந்தமாக இருந்தது. என் கண் எதிரே கள்ளிப்பட்டிக் கோதண்டம் தம்பதிகளின் பொதுநலச் சேவை உருக் கொள்ள ஆரம்பித்தது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விருதுகள், அடையாளச் சீட்டுகளைப்பற்றி ஒருவார்த்தை இங்கே சொல்லவேண்டும், பிரதிநிதிகள், பார்வையாளர்கள், விருந்தினர்கள், வரவேற்பாளர்கள். என்று ஒவ்வொருவகையினரும் தனித் தனி தங்கள் தங்கள் தகுதிக்கேற்பக் கட்டணங்கள் செலுத்த வேண்டியது சாதாரணமாக எந்த மகாநாட்டிலும் காணக் கூடிய ஏற்பாடு. ஆனால் கருவாரூர்த் தமிழ்த் திருநாளில் இந்தக் கட்டணத் தொல்லைகள் ஒன்றும் கிடையாது. வந்திருந்தவர்களுக்கு இலக்கிய ஈடுபாடு எத்தகைய தென்பதைப் பொருத்து இடபேதங்களும் காட்டப்படவில்லை. உணவு, சிற்றுண்டி முதலியவைகளில் ஒரு வேளைக்கு 8 அல்லது 10 பந்திகளுக்குமேல் அலுக்காமல் சலிக்காமல் தொண்டர்கள் ஓடி ஓடி உபசரித்தார்கள். பசிவேகத்தால் கூட்டம் நேரமாக ஆக சற்றுப் பொறுமையிழந்த தென்றால் அதற்கு வரவேற்புக் கழகத்தினர் எந்த வகையிலும் காரணமல்ல.

மகாநாடுகள் என்றால் உணவு ஏற்பாடுகள், எப்படியிருக்குமென்பதை ஒருமாதிரியாக எதிர் பார்க்கலாம். ஆனால் வட்பாதி மங்கலம் ஏற்பாடுகளில் முற்றிலும் எங்களுக்கு ஏமாற்றம்தான் அதிகமாயிருந்தது. இவையொத்த வேள்வி விருந்துகள் புவி எங்கணும் நாங் கண்டதில்லையென்று தொனிப்பட்டதாகப் பாரதியார் வர்ணித்திருக்கிறாரே அதேமாதிரிதான். இரண்டு தித்திப்பு, வெண் பொங்கல், உப்புமா இட்லி, அருமையான மிளகாய்ப்பொடி! அடடா "சொல்ல நாவுகனியுதடா" என்றுதான் பாடத்தோன்றுகிறது. சாம்பார்சட்னி, எத்தனை ரகம்? விருந்துபசாரமென்றால் தஞ்சாவூர்ப் பண்பாட்டின் சிகரம் அவரு செய்திருந்த ஏற்பாடுகளும் உபசாரணைகளும். முதல் எழுத்தாளர் மகாநாடு கோயம்புத்தூரில் ஜி. டி. நாயுடு அவர்களின் மாளிகையில் வசந்தம் ஆசிரியர் திருஞான சம்பந்தம் நடத்திவைத்தாரே அந்த நினைவுதான் உண்டாயிற்று. கொங்கு நாட்டாராகிய அவிஞசிலிங்கம் இந்த ஆண்டு தமிழ்த் திருநாளுக்குத் தஞ்சை ஜில்லாவைப் பொறுக்கியெடுத்த அண்ணாச்சி வேதாரத்தினம் பொறுப்பில் விட்டது மிகவும் பொருத்தமானதுதான. அண்ணாச்சியின் ஆலோசனைகளுக்கு எள்ளுக்கு முன் எண்ணையாக இருந்து நிருவாகம் செய்த வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியாரின் கர்மவீரம் மகத்தானது. பணம் மட்டுமிருந்தால் ஆய்விட்டதா? ஆள்கட்டு, அன்பு, அபிமானம், ஏவல்கொள்ளும் வல்லமை, பண்பு, நாகரீகம் இவ்வளவும் அறிந்த இளைஞர் திருவாளர் வடபாதிமங்கலம். காலைஉணவை முடித்துக்கொண்டு வெளியே வரும்போது இளம் வெய்யலில் எதிரே மணி அலை வீசித்துவண்டு நிற்கும் கமலாலயத் தடாகமும் நடுவில் எடுத்துக்கட்டிய அற்புதமான கோயிலும், கரைக்கும் கோயிலுக்கும் பொருத்தியுள்ள கம்பியைத் துடுப்பாக வைத்துப் படகு நீந்திச் செல்வதும் ஒரே கண்கொள்ளாக் காக்ஷியாக இருந்தது. ஆரூரர் வாயிலில் அணி வகுத்து நின்ற யானைகளின் மீது பழந்தமிழ்ச் சுவடிகள் எழுந்தருள திருவெண்காடு சுப்ரமண்யத்தின் நாதஸ்வர இசை வெள்ளத்தின் அலை அசைவுகளுடன் யானைகள் அடி எடுத்துவைக்கப் பவனி புறப்பட்டுக்கொண்டிருந்தது.

—தொடரும்.

✱

சூதகத்தை நிறுத்தியது.

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3 நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5 மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. [illegible]

(வி. பி. க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge. CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, China Bazaar Rd. MADRAS

கரூர் டி. மு. கோட்டு

O. S 39/49

ராச்சப்ப கவுண்டர் —வாதி

ராசாத்தவலசு ராமசாமி கவுண்டர் —பிரதிவாதி

வாதி ஷை நம்பரில் புரோனோட்டின் பேரில் அசல் வட்டி ரூ. 465—15—0-ம் பின் வட்டியும் தாவா சிலவும் கிடைக்க உம் பேரில் தாவா செய்து 2-6-1949 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது.

U. R. கிருஷ்ணமூர்த்தி அய்யர்,
வக்கீல்.

27—4—49 கரூர்.

தமிழன் பெருமை......

பண்டைப் பெருமை பேசுவது சிலருக்குப் பிடிக்காது "உன் பாட்டன் லட்சாதிபதி என்பது சரிதான். நீ பிட்சாதிபதியாகத்தானே இருக்கிறுய்? பழமை பழமை என்ற பாவனைப் பேச்சினுல் என்ன லாபம்?' என்று கேட்பார்கள் இவர்கள்

லாபம் இருக்கிறது. பழமையின் சரித்திரம்தான் புதிய வாழ்வுக்கு நம்மை முனைவிக்கிறது. வீர மரபில், சத்திய குலத்தில் வந்த மாந்தர், சூழ்நிலைகளால்—காலகதியால்—தம்மை மறந்துத் தருக்கி நிற்கும்போது சரித்திரப் பெருமையை நினைத்துப் பார்க்கப் பேரிலக்கியங்கள் தோன்ருவிட்டால் சமுதாயம் சவமாகிவிடாதா?

நீறு பூத்த நெருப்புப்போல, பண்டைய நாகரீகத்தை—சரித்திரம் கண்டறியாத நமது பெருமையினை நாம் மறந்து நிற்கும்போது பாரதி போன்ற கவிஞர் தோன்றி புது வாழ்வுக்கு நம்மை நடைபழக்கித்தான் வந்திருக்கிருர்கள். எந்த நாட்டு இலக்கியத்திலும் இந்த மலர்ச்சி ஏற்படத்தான் செய்திருக்கிறது. புத்தன் அன்று ஏற்றிய ஞான விளக்கு, தாகூரும், பங்கிம் சந்திரரும் வங்காளத்தில் காட்டிய புது வாழ்வு, குஜராத்தியில் முன்ஷியின் பொன்கரம், சைனுவில் லின்யூடாங்கின் புதுக் குரல் இவை யெல்லாம் பழமையின் ஊற்றில் பெருகிவந்த புது வெள்ளமன்ருே?

பஞ்சாலைகளிலும் தோட்டக் காடுகளிலும் வயல் வெளிகளிலும், சுரங்கங்களிலும் உழைத்து ஓய்ந்துகொண்டிருக்கும் தமிழ் மகனுக்குப் புதிய உணர்வும் வேகமும் தர எத்தனை பண்டிதர்கள் முன்வருகிருர்கள்! விரல்விட்டு எண்ணுவதற்கேனும் இடமிருக்கிறதா?

சமுதாய சீர்திருத்தம் கலா சேவை என்பதெல்லாம் எளிதான காரியங்களல்ல. வைரமுடைய நெஞ்சும், எல்லையற்ற கருணையும் படைத்திருக்க வேண்டும். தமிழன் நிலைகண்டு இப்படித் துடித்தெழும் ஒரு சில கலைஞரின் வரிசையிலே நாடகப் பேராசிரியர் திரு. ரா. வெங்கடாசலம் ஒருவர்.

நாடகத் துறை நாட்டு மக்களை விழிப்புறச் செய்யும் நல்ல முறை என்பதைக் கண்ட ரா. வெங்கடாசலம் அவ்வழி செயலாற்ற முனைந்தார். டி. கே. எஸ். சகோதரர்களின் "இமயத்தில் நாம்" நாடெங்கும் புகழ் பெற்றிருக்கும் நமது ஆசிரியர் வெங்கடாசலத்தின் கலா மண்டபம்.

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியின் கலைத் தேட்டம் மிகுந்த கண்களில் நமது நாடக ஆசிரியர் தப்ப முடியுமா? இன்று கோவையில் அவரது நாடக சபாவில் ரா. வெங்கடாசலத்தின் "தமிழன் பெருமை" திகழ்கிறது.

சாதிக்கொடுமை நம் சமூகத்தை ஆட்டிவைக்கும் மாயப் பேய்களில் ஒன்று. சாதி வித்தியாசத்தை ஒழித்துக்கட்ட எத்தனையோ மகாநாடுகள், எத்தனையோ கூட்டங்கள், எத்தனையோ விவாதங்கள் நடைபெற்றன. மதத்தின் கொடுமை ஒழிந்ததா? பாஞ்சாலப் படுகொலைகள், வங்கப்பிரிவினைகள், எல்லைப் புறஉண்மைகள், எல்லாம் எதைக் காட்டின? அறிஞர் அறவுரை அவனிக்கு ஆற்றல் அளித்ததா? அவலம் நீக்கிற்ருு? அன்பு தழைக்கச் செய்ததா? துப்பாக்கிக் குண்டுகள் எம் தூயனின் நெஞ்சை கண்ணீர் சொட்டச் சொட்ட, எம் தாய் நாட்டு மக்கள் கண்ணீர் சொட்டச்சொட்ட அகிலத்தின் அன்புக்கண்ணீரே சொட்டச்சொட்ட அண்ணலின் ஆவியைக் கொள்ளை கொண்டு போயிற்றே, அதற்குப் பின்னுலாவது இந்த சாதிக் கொடுமைகள், மதங்கள் மாற்சரியங்கள், நைந்து கிழிந்து அழிந்து போன மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிந்தனவா?

புரையோடிய பத்தாம் பசலிப் பேச்சுகள் செத்து மடிந்தனவா? இற்றுக்கொண்டிருக்கும், கரையான் பிடித்த மாசு படிந்து பாசி படிந்த அபத்தப் பேச்சுகள் அகன்றனவா?

முக்கியமாக நம்மை வருத்திக்கொண்டிருக்கும் ஒரு மூலப் பிரச்னையை வெகு லாவகமாக தீர்த்து வைக்க ஒருவழியைக் கண்டு பிடித்திருக்கிருர் நண்பர் வெங்கடாசலம் அவர்கள். "தமிழன் பெருமை"யை விளக்கி.

தமிழனுடைய பெருமையில் எதைக் காண்கின்ருேம்? அடையா நெடுங்கதவும், அஞ்சல் எனும் சொல்லும் உடையான் தமிழ் மகன் என்பதைப்பார்க்கிருேம். முன்னிலங்க பின்னிலங்க முத்திலிங்கு வாசலினுன் தமிழ் மகன் என்பதைப் பார்க்கிருேம். செந்நெல்லும் கரும்பும் தேனும் தினைமாவும் செழித்து இயற்கை எழில் பொழிந்து அமுதம் தெளித்த எம் செந்தமிழ் நாட்டின் சுந்தர ஓவியத்தையே கண்ணுக்கெதிரே காண்கிருேம். தென் குமரியிலிருந்து விந்தியம் கடந்து இமயம் தொட்ட விந்தையோர்களை கலை விளக்கங்களை தாய்நாட்டுக் குழந்தைகள், ஆடவர் பெண்டிர் அனைவரும் கண்டு அகமகிழ வேண்டாமா? இன்று தமிழன் கண்மூடித்தனமாக உறங்கிக் கிடக்கிருன். அவன் ஒளி விழிப்புக்கொள்ள ஓர் புது முயற்சி புரிந்திருக்கிருர் நண்பர் வெங்கடாசலம் அவர்கள்.

பொதுவில் தமிழன் பெருமை அபார முயற்சி. வெற்றி கண்டுவிட்ட பெரியதோர் முயற்சி.

பாடல்கள் பரமானந்தம், கவிஞர் ஷெரீப் கல்கண்டு போன்ற கவிதைகள் இயற்றித்தந்திருக்கிருர. தித்திக்கும் தீந்தமிழ்ப் பாடல்கள் அவை இசை அமைப்பு இங்கிதம். வாழ்க இசை மன்னன் சிதம்பரம் ஜெயராமன். இதர நடிகர்கள் அபாரம் சீன்கள் சிந்தைக்கு இனிய விருந்து. கதையைப்பற்றி இங்கே நாம் கூறப்போவதில்லை. எல்லோரும் கண்டு இன்புற வேண்டும் என்பதே நமது ஆவல்.

புத்தக விமர்சனம்

பெண்மனம்

ஆசிரியை 'லக்ஷ்மி'. சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. விலைரூபாய் இரண்டே கால்.

ஆனந்த விகடனில் 'ஸ்ரீமதி லக்ஷ்மி' எழுதிவந்திருக்கும் உல்லாசமான சிறு கதைகளிலும், நாவல்களிலும் 'பெண்மனம்' சிறந்ததென்று கூறலாம். சந்திரா என்னும்பெண்ணை நடுமையமாக வைத்துப் பின்னப்பட்டிருக்கும் இந்தக் கதையில் பெண்மை வளர்த்த நடையும் தொனியும் முழுதும் தென்படுகிறது. சிக்கலற்று இலேசாகத் தவழ்ந்து செல்லும் இந்த நவீனம் ஆசிரியையின் ஒரு நல்ல முயற்சி.

இடதுசாரி ஐக்கிய முன்னணி

"இடதுசாரி" எழுதியது இடதுசாரி பிரசுரம், 88 சோலையப்பன் தெரு, சென்னை-21

கம்யூனிஸ்டுகளையும் சோஷலிஸ்டுகளையும் கண்டிக்கும் இந்த நூல் இடதுசாரி ஐக்கிய முன்னணி விரைவில் ஏற்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறது. நாட்டின் நிலையைப் பரிசீலனை செய்து பல உண்மைகளை எடுத்துக்காட்டும் இந்நூல் படித்து ரஸிக்கத்தக்கது.

திருவள்ளுவ நாயனரும், பெரிய புராணமும்

தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு.

முன்னுரையில் திருவாவடுதுறை ஆதீன கைங்கரியங்கள் பற்றி குறிப்புகள் அடங்கியிருக்கின்றன. திருக்குறளிலும், பெரிய புராணத்திலும் இருக்கும் கருத்துப் பொருத்தங்கள் குறித்த நூலே இது.

சமயம்

தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு.

சமயத்தின் பல்வேறு அம்சங்களையும் விரிவாக ஆராயும் இந்நூல் முதற் கடவுள் நிறுத்திய சமயத்தில் ஆரம்பித்துப் பல வழி துறைகளையும் ஆராய்கிறது

கிராம ஒளி

ஆசிரியர் நா. ராமசாமி. மாதமிருமுறை, தனிப்பிரதி ஒரு அணு. "கிராம ஒளி" திட்டக்குடி தபாலாபீஸ்.

இச்சிறு நூலில் "கதரின் மேன்மை," "கிராம முன்னேற்றம்" முதலிய பல கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன. விமரிசனத்துக்கு வந்திருக்கும் இதழின் அட்டையில் மகாத்மா காந்தியின் படம் திகழ்கிறது.

கலைமணி

ஆசிரியர் எ. ஆர். ஷண்முகநாதன், 13-பி வில்லியம்ஸ்ரோடு, திருச்சி. விலை அணு 8.

நிறையப் புகைப்படங்களடங்கியிருக்கும் இந்த இதழில் சினிமா சம்பந்தமான சேதிகள் நிறைய அடங்கியிருக்கின்றன. பெரிய "சைஸில்" வெளியாகும் இந்தப் பத்திரிகை சினிமாத் துறையில் நல்ல தொண்டு புரியுமெனத் தோற்றுகிறது.

✱

சிறு கதை

என்ன சொந்தம்?

டி. எஸ். என். சாமி

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்' என்று சொல்லும் பழமொழிக்கு உதாரணமாக என் வாழ்க்கை அமைந்திருப்பதைக் குறித்து நானே அகமகிழ்வது உண்டு. என் எட்டுவயது அருமைப் பேரன் சந்துரு காலை மாலை இருவேளையும பள்ளிக்கூடம் விட்டு வரும்போது "பாட்டி" என்று கூவிக்கொண்டே சந்தோஷத்துடன் என் கழுத்தை வந்து கட்டிக்கொள்வான். நான் அன்புடன் "வாடா என் கண்ணே" என்று அவனை வாரி அணைத்து முகத்தில் முத்தமாரிசொரிவேன். அதில் எனக்குள்ள ஆனந்தம் சொல்லிமுடியாது.

ஒருநாள் குழந்தை சந்துரு பள்ளிக்கூடம் விட்டு வரும்பொழுது அழுதுகொண்டே "பாட்டி, பாட்டி" என்று விக்கிய வண்ணம். உள்ளே வந்தான் "என்னடா கண்ணு? உன்னையார் என்ன பண்ணிஞ? அழாமல் சொல்லு." என்று சற்று படபடத்தவண்ணம் அவனைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு கண்களைத் துடைத்தேன். "பாட்டி நான் பள்ளிக்கூடம் விட்டு வரும்போது விசுவம், என்னை" எங்காத்துக்கு வாடா பக்ஷணமெல்லாம் தரேன்னு கூப்பிட்டான். அதுக்காக அவன கூடபபோனேன். அப்போ அவன் அம்மா வந்து 'ஏண்டா அந்த எச்சல் பொறுக்கியை இங்கே. அழைச்சிண்டு வந்தே'ன்னு என்னை கழுத்தைப் பிடிச்சுத்தள்ளி அவனையும் அடிச்சாபாட்டி." என்று அழுதுகொண்டே சொன்னான்.

நான் பதற்றத்தை பலவந்தமாக அடக்கிக்கொண்டு "இதற்காக அசடு மாதிரி அழுவாளா, பேசாமல் இரு நாளை முதல் நீ அவாவீட்டுப் பக்கம் போகவேண்டாம்," என்று அவனைச் சமாதானப் படுத்தினேன். குற்றத்திற்கு தகுந்த தண்டனை யளிக்காத நீதிபதியைப் பார்க்கும் வாதியைப் போல். என் முகத்தை பரிதாபமாகப் பார்த்தான் குழந்தை சந்துரு. அவன் எதைக்கண்டான்? எங்களுக்குள் அடங்கியிருக்கும் சிக்கல்களை.?

வாழ்க்கையில் பலவித கஷ்டங்களில் மிதந்துவந்து கரை ஏறும் சாதனமாகப் பேரன் சந்துருமூலம் முன்னேறிவரும் எனக்கு இம்மாதிரியான சிற்சில சம்பவங்களில் என் மனம் வேதனைக்குள்ளாகாமல்இருக்க முடியவில்லை; சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் காரியத்தில் கருத்தானேன்.

பல நாள்வரை பிள்ளைப்பேறு இல்லாமல் காலம் கடத்திவந்த நாங்கள், நிறைந்த எங்கள் சொத்தை ஆளுவதற்குப் பிற்கால சந்ததி ஒருவருமில்லையே என்று சுற்றத்தார் குழந்தைகளில் யாரையாவது சுவீகாரம் எடுத்துக்கொள்வதென்று தீர்மானித்தோம். அப்பொழுது சம்சாரியாக ஏழ்மையில் உழலும் அவர் தங்கை பிள்ளைகளில் யாரையாவது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார்.

நான், 'அந்த தரித்திரத்தின் வீட்டுப் பிள்ளை நம் வீட்டுக்கு வந்தால் நம் சொத்தும் அவர்கள் ஏழ்மைக்கு இரையாகி நாமும் ஓட்டாண்டியாக வேண்டியதுதான்.' என்று தனக்கு சமதையாய் உள்ள என் அண்ணன் பிள்ளை சீனுவை சுவீகாரம் எடுத்துக்கொண்டேன். அதில் அவருக்குக் கொஞ்சம் மனக்கசப்பு ஏற்பட்டிருந்தாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் சும்மா இருந்துவிட்டார்.

சீனு பதினைந்தாவது வயதில் எங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவன் வந்தது முதல் பெற்ற பிள்ளைக்கும் வளர்ப்புப் பிள்ளைக்கும் உள்ள வித்தியாசத்தை எளிதில் எங்களுக்குக் காட்டத் தொடங்கிவிட்டான். அவன் ஒவ்வொரு சமயம் செய்யும் அட்டகாசத்தைப் பார்க்கும் பொழுது, எங்களுக்கு இருக்கும் சொத்து அனைத்தையும் ஏதாவது தருமத்திற்கு எழுதிவைத்துவிட்டு பிள்ளை இல்லாமலே பரலோகம் போகக்கூடாதா? என்று தோன்றும். என்ன செய்வது? விதியையும் மதியையும் நொந்துகொண்டு தக்க வயதில் தகுந்த இடத்தில் ஒரு கல்யாணத்தையும் செய்து முடித்தோம். அப்படியும் அவன் அட்டகாசம் அடங்கியபாடில்லை. அவனுக்கு மனைவியாக வாய்த்தவள் நல்ல குணமும், புத்திசாலியாகவும் காணப்பட்டாள். அதில் நாங்கள் கொஞ்சம் சந்தோஷத்தையும் அடைந்திருந்தோம். ஆனால் எங்களுடைய துரதிஷ்டவசத்தால் அந்தப்பெண் ஒரு ஆண் மகவை ஈந்து இறைவனடி சேர்ந்தாள். அவளைப் பின்பற்றி என் கணவரும் சென்றுவிட்டார்.

சுகதுக்கத்தில் பங்கெடுத்துகொண்டிருந்த அவரும் சென்றுவிட்டபடியால் என் கஷ்டம் மேலும் அதிகரித்தது. சொல்வார்த்தை கேளாத சுவீகாரப் பிள்ளையின் அட்டகாசத்துடன் தாயில்லாத பச்சிளங் குழந்தையின் பாதுகாப்பும் என் தலையில் வந்து விடிந்தது. தள்ளாத வயதில் இதை எல்லாம் நான் ஒருங்கே சமாளிக்க முடியாதென்று விரைவில் சீனுவுக்கு மறுவிவாகத்தையும் செய்து முடித்தேன். அது எல்லாவற்றையும்விட விபரீத பலனைக் கொடுக்க ஆரம்பித்துவிட்டது.

இரண்டாவது நாட்டுப்பெண்ணுக வந்த ஜானகி, படித்த பெண் என்ற ஹோதாவிலும் செல்வந்தர் வீட்டுப் பெண் என்ற அகம்பாவத்திலும் என்னை மாமியார் என்ற பதவியிலிருந்து விலக்கி விருந்தாளி என்ற ஹோதாவில் நடத்த ஆரம்பித்தாள். தாயில்லாத அந்தக் குழந்தை அவளிடம் பட்ட அவஸ்தை சொல்லிமுடியாது. நான் அவளுக்கு எந்தவித உரிமைக்கும் விலக்காக காணப்பட்டேன். இந்த நிலையில் என் மனம். சொத்திருந்தும் சுகமற்றவாழ்க்கையாய் முடிந்துவிட்டதே என்று வருந்தியது. சீனுவும் அவள் துர்க்குணத்திற்கு ஒத்துழைத்தான். நான் இந்த சங்கடமான நிலைமையைப் பொறுக்கமுடியாமல், தாயற்ற சந்துருவை கையில எடுத்துக்கொண்டு கொஞ்சகாலம் அண்ணன் வீட்டுக்குப் போய்விட்டு வாலாமென்று புறப்பட்டுவிட்டேன்.

இந்த சமயம் தன் கணவனுடன் சேர்ந்துகொண்டு என்னென்ன அக்ரமங்கள் உண்டோ அவ்வளவையும் செய்து பார்த்துவிட்டாள், நாட்டுப் பெண் ஜானகி. சிலமாதங்கள் அண்ணன் வீட்டில்இருந்து திரும்பிய நான் உள்ளே சுவாமி இருக்கும் பூஜை அறைப்பக்கம் போனேன். எனக்கு தூக்கிவாரிப்போட்டது. சுவாமி இருந்த பீரோ முழுவதும் காலியாகி, வீட்டுப் பாத்திரங்கள் அடுக்கப்பட்டிருந்தன. எனக்கு ஆத்திரம் எல்லைமீறியது. பரம்பரையாக-மூன்று தலைமுறை காலமாக பூஜித்துவந்த இந்தக் குடும்பத்திற்கு இப்பொழுது இந்த ராக்ஷச நாட்டுப் பெண்ணால் ஹானிஏற்பட்டுவிட்டதே என்று." ஏண்டி ஜானு உன்னுடைய புத்திகெட்டதனத்தை இப்படியா காட்டுவது, சுவாமியை எல்லாம் என்னடிசெய்தாய்? குலத்தைகெடுக்க வந்த கோடாலிக்காம்பே" என்று அடக்கமுடியாத ஆத்திரத்தால் கத்தினேன்.

உள்ளேயிருந்து வெளியில் வந்த ஜானகி "இந்தாருங்கள் இந்தமாதிரி அனுவசியமாகப் பேசினுல் நான் பொறுக்கமாட்டேன். உங்கள் பிள்ளைதான் எல்லாவற்றையம் வாசலில் பேரிச்சம்பழக்காரனிடம் விற்றுவிட்டார். வீணுகப் பேசினுல் நான்-இப்பொழுதே வெளியேறிவிடுவேன்." என்றுள் ஏதோ சம்பந்தமற்றவள்போல்.

நான் பதில்பேச வாய்திறக்குமுன் அங்கு வந்த சீனு "ஏன் அம்மா, உனக்கு வயதாகியும் புத்தியில்லை ஊரிலிருந்து வந்ததும் வராததுமாக கர்பிணியாயிருக்கும் அவளிடம சண்டைக்கு கிளம்பிவிட்டாயே: உனக்கு நாங்கள் இந்த வீட்டிலிருக்க பிடிக்காவிட்டால் இப்பொழுதே கிளம்பி விடுகிறோம்." என்று கோபமாக இரைந்தான்.

நான் பேசசக்தியற்று நின்றேன். இந்த சச்சரவுக்குப்பின் அவர்கள் இருவரும் என்னுடன் பேசக்கூட இல்லை. சிறிது நாள் சென்றபிறகு சீனுவும் மனைவியும் வெளியேறி அடுத்த தெருவில் தனிக் குடித்தனம் நடத்த ஆரமபித்தார்கள். அந்த தாயற்ற குழந்தையின் பராமரிப்பு மீண்டும் என்னைத்தான் சார்ந்தது. நான் தனிமையுடன் சந்துருவை வளர்க்க முற்பட்டேன், ஏனே சீனு தனக்கு முதற்பிள்ளை யொருவன் இருக்கிறான் என்று இன்றுவரை நினைத்ததாகவே தெரியவில்லை.

அவனுடைய இரண்டாவது மனைவிக்குப் பிறந்த குழந்தை விசுவத்திற்கும் ஆறு வயது நிறைந்துவிட்டது, தள்ளாத காலத்தில் தனிமையில் வாடும் எனக்குப் பேரன் சந்துரு ஒரு சந்தோஷக் கருவியாக இருந்தான். அவனையும் அந்த துன்மார்க்கி துன்புறுத்த தலைப்பட்டுவிட்டான் என்று விளங்கும்பொழுது என் வருத்தம் பன்மடங்காகியது. ஆனால் அவர்கள் எனக்கு விரோதமாகக் காணப்பட்டாலும் அவர்களுக்குப் பிறந்திருந்த அந்தக் குழந்தையிடம் எனக்கு எவ்வித வித்தியாசமும் காணப்படவில்லை. சந்துருவின்மேல் உள்ள பாசத்தை விசுவத்தினிடமும் குறைவில்லாமல் வைத்திருந்தேன். அந்த குழந்தை தாயார்வார்த்தையை தட்டாமல் நடந்து வந்தான். பள்ளிக்கூடம் விட்டு வரும்பொழுதும் போகும்பொழுதும் என் வீட்டு வாசல்படி ஏருமலே வாசலில்இருந்தபடியே சந்துருவுடன் விளையாடி விட்டுச் சென்று விடுவான். நான் அந்தக் குழந்தையைப் பார்க்கும் பொழுது கைநிறைய பக்ஷணம் செய்து கொடுக்கவேண்டுமென்று ஆசைப்படுவேன். ஆனால் நான் எது கொடுத்தாலும் வாங்க மறுத்து விடுவான். அது அவன் அம்மாவின் எச்சரிக்கை அவன் என்ன செய்வான்? குழந்தை சந்துரு "பாட்டி நான் விளையாடப் போகிறேன்." என்றதும் என் சிந்தனை கலைந்தது.

நாட்கள் பல உருண்டோடின. தன் பிள்ளை விசுவத்தை வாசிப்பு கெட்டுவிடுமென்று, அவர்களுக்கு தெரிந்த ஒருவர் வீட்டில் விட்டுவிட்டு அடுத்தஊரில் நடக்கும தனது உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்கு சீனுவும் ஜானகியும் சென்றிருந்தார்

(14ம் பக்கம் பார்க்க)

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57
Estd. 1909
Branch : MANNARGUDI

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

சந்தனுத் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம், அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல் வத்த தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல் கூந்தல் தைலம்

தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றது.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

(13ம் பக்கத் தொடர்ச்சி)

கள். அந்த சமயம் விசுவத்திற்கு லேசான ஜுரம் கண்டு பெரிதாக ஆரம்பித்து விட்டது. இது எனக்குத் தெரியாது. ஒரு நாள் சந்துரு பள்ளிக்கூடம்விட்டு வந்ததும், "பாட்டி விசுவத்திற்கு உடம்பு ஜுரம் அடித்து ஆஸ்பத்ரியில் இருக்கிருனும். நான் போய்பார்க்கணும, நீயும் வா" என்ருன்.

நான் ஒன்றும் புரியாதவனாய் "வண்டா அவன் அப்பா அமமாவெல்லாம் எங்கேடாபோனுர்கள். அவன் உடம்பு சரியா இல்லாதே போனுல வீட்டிலேயே டாக்டரைக்கூப்பிட்டு வைத்யம் பார்க்கப்படாதோ." என்றேன்.

"இல்லேபாட்டி அவன் அப்பா அம்மாவெல்லாம் ஊருக்குபோயிட்டாளாம். அடுத்தாத்து மாமாதான் அவனே ஆஸ்பத்ரியில் கொண்டுவந்து விட்டிருக்கார்" என்ருன்.

நான் அதற்கு மேலும் தாமதிக்க மனதில்லாமல் குழந்தையை அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன.

அங்கே அந்தச் சின்ன ஆஸ்பத்திரியில் இருக்கும் ஜனங்களின் முகத்தில் பூராவும் திக்கக்குறி காணப்பட்டது. எனக்கு மனதை என்னவோ செய்தது. உள்ளே படுக்கையில் படுத்திருக்கும் குழந்தையின் முகத்தில் பிரேதக்களே தோன்றியது. டாக்டரைப்பார்த்து "இதற்கென்ன செய்வது" என்றுகேட்டேன். "இப்பொழுது இன்னும் பத்து நிமிஷத்திற்குள் இந்தக் குழந்தைக்கு யாருடைய ரத்தமாவது கொடுத்தால் தான் பிள்ளே பிழைக்கும். இல்லாவிட்டால்..." என்று இழுத்தார்.

"சரி, நான், தருகிறேன் எப்படியாவது குழந்தை பிழைத்தால் போதும்" என்றேன்.

டாக்டர் ஆயுதபாணியாக வேலையில் முனைந்தார். இதற்குள் பெற்ருேருக்கு செய்தி எட்டிஆஸ்பத்ரிக்கு வந்தார்கள். படுக்கையில் என்னேயும் குழந்தையையும் பார்த்துவிட்டு மிரள மிரள என்னேயே பார்த்தார்கள். குழந்தையும் சிலமணி நேரத்தில் கண்விழித்து முனக ஆரம்பித்தான். பக்கத்தில் இதுவரை நின்றுகொண்டிருந்த தாயார் தந்தையர்களுக்கு என்ன தோன்றியதோ என்னவோ, "அம்மா, இந்தபாபிகளே மன்னித்து விடுங்கள் உங்களுடைய தங்கமான குணத்தையும் தியாகச் சிந்தையையும் அறியாது மதிமிழந்துவிட்டோம்." என்று கொதிக்கும் வெந்நீரைப் போல் என் கால்களில் கண்ணீரைப் பொழிந்தார்கள்.

நான் "பைத்தியம் மாதிரி அழாதீர்கள் குழந்தைகள் குற்றம் செய்தால் பெற்ருேர்கள் மன்னிப்பதில்லேயா என்ன? சந்தோஷமாக குழந்தையின் உடம்பை கவனியுங்கள்." என்றேன பெருமையுடன்.

சந்துரு, "பாட்டி இந்த விசுவத்தின் அப்பா அம்மாவெல்லாம் உனக்கு என்ன சொந்தம்." என்று காலைக் கட்டிக்கொண்டான். வாய்திறந்து பேசமுடியாமல் என் தொண்டையை அடைத்தது. குழந்தை சந்துருவை அப்படியே வாரியணைத்துக் கட்டிக் கொண்டேன்.

துறையூர் பெரிய மடம்

திருவண்ணுமலை ஸ்ரீ சிவப்பிரகாச ஸ்வாமிகள் வீர சைவ ஆதீனத்தைச் சேர்ந்த துறையூர் பெரிய மடம் பொதுஸ்தாபனமென்று சமீபத்தில் தீர்ப்பளிக்கப்பட்டு ஹிந்து மத தர்ம பரிபாலன போர்டாரின் ஆதிக்கத்தின கீழ் வந்திருக்கிறது. வீரசைவ சமூகத்தினரின் மத ஸ்தாபனமான இதற்கு உரிய தக்க ஆதாரங்கள் இதுவரை வெளிப்படாமல் இருந்துவந்த காரணத்தால் பெரிய மடத்தின் நிர்வாகிகள் தங்கள் சொந்த உடமையாக நாளது வரை கருதி அனுபவித்து வந்தார்கள். இதன் உரிமை சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டு இப்போது இந்தத் தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது.

கொங்கு நாட்டின் கலை வீரம்

"நமது நிருபர்"

விழாவுக்குத் தலைமை வகித்த திருஞான சம்பந்தம் சொற்பொழிவாளரை சபைக்கு அறிமுகப்படுத்தினர் "மதுரையிலிருந்து வந்திருக்கும் நமது "சாத்தனு"ரை, உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். இவர் பெயர் ரா. வெங்கடாசலம் "இமயத்தில்" இலச்சினை பொறித்த "தமிழன் பெருமை"யை நாடக பாணியில் நானிலமறியச் செய்யும் கலைஞர். அவர் மதுரையிலிருந்து வந்திருக்கும் நாடகத் தமிழ்ப் புலவர். அவருக்கு நமது கொங்கு நாட்டைப் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டியிருக்கிறது. முன்பொரு சமயம் மதுரையில் சங்கப்புலவர்கள் தாங்களே மிகமிகக கற்ரேரும் என்று செருக்குற்றுத் தருக்கி நின்ற போது நமது கொங்குநாட்டுப் புலவர் கோமான் தன் வீட்டு வேலைக்காரியை மதுரைப் புலவர் கூட்டத்திற் சென்று வாதிட்டு வாகை சூடிவா அனுப்பி அவ்விதமே வெற்றியும் கொண்டார். இதை மனதில் கொண்டு நமது நண்பர் இங்கே கூடியிருக்கும் கலைஞர்களாகிய உங்கள் முன்னிலையில் சில பேச்சுப் பேசுகென விடை தருகின்றேன்" என்று.

பண்டைநாள் ஆண்ட பாண்டிய மன்னனேப்போல பார வடிவும், வலிவும் படைத்தவீர ராஜனும் நண்பர் வெங்கடாசலம் அடக்கமும் சாந்தமும அணிகளாகப் பூண்டவர். அவர் தலைவரின் அறிமுகம் கேட்டுப் புன்முறுவலுடன், ஆயினும் வேகத்துடன் எழுந்துநின்று சொன்ஞர். "நன்று, நன்று, கொங்கு நாட்டுக் கலை வீரம் யாமறிந்தோம் வேலைக்காரியென்று வேற்றுமை காட்டாது அவளுடன் வாதிட்டுக் கலையாராய நாங்கள் தயங்காத கலைப் பித்தம உடையோம் என்பதும் அதில்தொக்கிநிற்கின்றதன்ருே' கூடியிருந்த கூட்டம் மகிழ்ந்து பொங்கியது

கோபிசெட்டி பாளையத்துக்கு அடுத்த ஓடத்துறை நஞ்சக் கவுண்டன் பாளையத்தில் கலைக் கழக ஆரம்பவிழா நிகழ்ச்சிச் சித்திரம் மேலே கொடுக்கப் பட்டிருப்பது.

திருவாரூர் சென்று தமிழ் உணவு அருந்தி மகிழ்ந்த எக்களிப்பில் அன்பர் காளியப்பா தனது கிராமத்தில் அரிய தமிழ்க் கலைப்பணிக்கென்று சென்றவாரம் கலைக்கழகமே தோற்றுவித்தார். சுமார் இரண்டாயிர மக்கள் கூடியிருந்து அரிய சொற்பெருக்குகளேக் கேட்டு மகிழ்ந்தார்கள். பலலடத்து ராசா, குமாரசாமியாரும் நமது ஆசிரியர் திருலோக சீதாராமும், மாதமணி கே. ஸி. எஸ். அருணுசலமும சொற்பெருக்காளர்கள்.

வழக்கறிஞர் ஓ. எம். ரங்கசாமிக் கவுண்டர் ஆயகலைகள் அறுபத்தி நானகு மட்டுமெல்ல, அறுபதிஞயிரத்துக்கும் மேல் என்பதை விளக்கிக் கூறினர். கலை அழகுடன் வாழத் தெரிந்து கொள்ளவும், வாழப் பிறருக்குக் கற்றுக்கொடுக்கவும் கொங்குநாட்டு மக்கள் இயல்பாகவே ஊக்கம் உடையவர்கள். வசந்தம் ஆசிரியர் திருஞான சம்பந்தம் கொங்குநாட்டின் மண்ணில் கலைப் பயிர் வளர்க்கும்போது என்னதான் நடக்காது? உலகமெங்கும் புகழ் மணக்கபொருளாதார, அரசியல் துறைப் பேரறிஞராக விளங்கும் டாக்டர் ஆர். கே. ஷண்முகம செட்டியாரே திருச்சியில் சொன்ஞர். "நான் தமிழ் எழுத்தாளனுக ஆனது வசந்தம் ஆசிரியர் திருஞான சம்பந்தம் அவர்களால் தான்" என்று. நண்பர் காளியப்பாவின் கலை ஆர்வம் பரிமளிக்குமென்பதில் என்ன தடை?

1839ம் வருடத்திலிருந்து இன்னமும் முதல்தரமாக பிரக்யாதி பெற்று விளங்குகிறது!



உலக பிரசித்திபெற்ற
அசல்
ஷண்முகம் பட்டணம் பொடி
உலக மார்க்கை கவனித்து வாங்கவும்
எங்கும் கிடைக்கும்
அசல் ஷண்முகம் பட்டணம் பொடி
தபால் பெட்டி 140. மதராஸ்

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளே இக் கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனல் டாக்டர்கள் இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறர்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்
போலி மருந்துகளேக் கண்டு ஏமாருதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதருஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில், கிழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

ஆர். ஸ்ரீநிவாசய்யர்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

திருச்சி நகரத்தின் சரித்திரத்தில் இப்படி மக்கள் மறக்க முடியாமல் நினைத்துப்பார்த்து ஆறுதலடையக் கூடிய வாழ்க்கை அமரர் ஆர். ஸ்ரீநிவாசய்யர் அவர்களுடையது. திருச்சி நகரத்தின் பொது வாழ்க்கையைப் பற்றி அறிந்தவர்களுக்கு இதன் அடிப்படையான உண்மை நன்கு புலனாகும்.

ஆர். ஸ்ரீநிவாசய்யரை அறியாத ஜில்லாவாசிகள் இருக்க மாட்டார்கள். மாகாணமெங்கும் பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கும் நாயகர்கள் பலருக்கும் இந்தப்பெயர் மிக நெருங்கிய தொடர்புடையதாகும்.

திருச்சி நகரத்தில் ஒரு காலத்தில் ஹிந்து சமூகத்தின் கலாசாரம் கேலிக்கும் அவமதிப்புக்கும் பாத்திரமாகியிருந்த உண்மை இப்போது பொய்யாய்ப் பழங்கதையாய், வெறுங்கனவாக ஆகிவிட்டிருக்கலாம். வீரம் விளைத்துத்துடித்தெழுந்த செம்மல் ரத்தினவேலுத்தேவர் துவண்டு கிடந்த தோள்களைத் தட்டி எழுப்பினரென்றால் உறங்கிக் கிடந்த உள்ளங்களில் கலாசாரப் பண்பும், பண்டைய நாகரீகப் பெருமையும் வளர்த்த ஒரு ஹிந்து ஆர். ஸ்ரீநிவாசய்யர் என்று சொல்லவேண்டும். சாமி பூதங்களிலோ சமய தத்துவங்களிலோ நம்பிக்கை தகர்ந்து கொண்டிருக்கும் இந்த நாளில் கூட, கொண்ட கொள்கைக்கு— ஒரு ஹிந்து என்ற பெருமையுடன் சமூகத்தில் நடமாட மெய்த்துணிவு எவ்வளவோ வேண்டும். இந்த மெய்த்துணிவின் காரணமாக அவர் சிலரின் எதிர்ப்புக்கும் கூட ஆளாக நேர்ந்ததுண்டு.

தேசிய உணர்ச்சித் தீ நாடெங்கும் பெருக்கெடுத்த ஆரம்ப நாட்களில் திருச்சிமாநகரின் பங்குக்கு, டாக்டர் ராஜன் போன்ற தலைவர்களின் தனித்துணைவராக விளங்கியவர் ஆர். ஸ்ரீநிவாசய்யர்.

இயற்கையின் கடுங்கோபத்துக்காளாகி பீகாரில்பூமண்டலம் குலுங்கிய போது லக்ஷக்கணக்கில் மக்கள் சிதறுண்டு போன கொடிய-சோக சம்பவம் யாரும் மறந்திருக்க மாட்டார்கள். இரு கரங்களையும் ஏந்தி இந்த நாடெங்கும் சாந்த சொரூபன் ராஜேந்திரபிரசாத் நடமாடித் திரிந்த போது, இந்தப்பக்கத்தில் அல்லும் பகலும் அருகிலிருந்து பெரும்நிதிதிரட்டிக்கொடுத்தார்.

தேசீயக்கல்லூரியின் இயக்கக்குழுச் செயலாளராகப் பத்து ஆண்டுகளின் மேலாக அவர் புரிந்தபணி, கல்லூரியின் பொருளாதார நிலையையும், கல்வித்துறைத் தொண்டையும் சிறப்பித்திருக்கிறது.

மேனாட்டுப் பண்டங்களுக்குச் சந்தையாக இருந்த நாட்டில் சுதேசிப் பொருள் உற்பத்தி வேகம் தொடங்கிய காலத்து அந்தக் கொள்கையின் அடிப்படையில் இந்தியன் குட்ஸ் டிப்போ தோற்றுவித்தது அவருடைய தேசீயப் பெருமிதத்திற்கு ஒரு சின்னம். நகர மாந்தருக்கு மின்சாரத்தொண்டுபுரியும் திரு சேஷசாயியின் ஸ்தாபனங்களனைத்திலும் நிர்வாகத் தொடர்பு அவருக்கு இருந்திருக்கிறது. கிளைகள் ஒன்றும் இல்லாமல் நகரத்தில் மட்டுமே நாணயச் செலாவணிசெய்து மிகத் திறம்பட நடைபெறும் திருநிதி பாங்கியின் உயர்வுக்குக் காரணமானவர்களில் முன்னணியில் இருந்தவர் இவர்.

தான் ஒரு ஹிந்து என்ற பெருமிதம் அவருக்கு இருந்தது. அதற்காக வேறு மதத்தினரிடம் திறம்பாத அன்பும் குறைவறப் படைத்திருந்தார். அத்வைத சபா, ஹிந்தி பிரசார சபா போன்ற எத்தனையோ பொது இயக்கங்களில் அவருக்குத் தொடர்பிருந்தது. பின் காலத்தில் அவருடைய மனப்பண்புக்கும் இன்றைய அரசியல் துறைக்கும் ஒத்து வராமல் போகவே சமூகத் தொண்டு இயன்றவரை புரிந்திருந்தார். திருச்சி வழக்கறிஞர் பேரவையின் தலைவராக அவர் இருந்தார். நகரத்தின் முதல்வர் ஒருவர் இன்று நம்மிடை இல்லை. குடும்பத்தினருக்கு இது சோகத்தின் சிகரம். நகர மாந்தருக்குப்பெரு நஷ்டம். அவருடைய வாழ்வு— எத்தனையோ மனிதருடையதைப் போல—ஒரு கனவாகத்தான் ஆகி விடும். அவருடைய உதவியை எண்ணி எங்கும் ஆயிரக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அத்தனையும் ஆரவாரமில்லாது அடக்கமாக அவர் புரிந்த உதவியின் எதிரொலி. அவர் அமரர்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்ஸல்கான் மறுநாள் காலையில் கம்பீரமாக மூன்று சிறந்த வீரர்களை அழைத்துக்கொண்டு சந்திப்பிடத்துக்குப் பிரயாணமானான். அந்த மூவரில் பந்து என்ற வீரனும் ஒருவன். சந்திப்பிடத்துக்கு வந்த காலையில் பந்துவை சிவாஜி கண்ணுற்றான். உடனே அவனை விலக்கிவிட்டால் தன்னவரில் ஒருவனை விலக்குவதாகக் கூறினான். அவன் விருப்பப்படியே செய்யப்பட்டது.

சிவாஜியும், அப்ஸலும் எதிரெதிரே நின்றார்கள். சிவாஜி அப்ஸல்கானுக்கு மகத்தான உபசாரங்கள் செய்தான். கடைசியில் இருவரும் ஒருவரையொருவர் அணைத்துக்கொள்ள வேண்டிய கட்டம். சிவாஜி எழுந்திருந்து அப்ஸல்கானுக்கு அருகில் வந்து தன்னை அவனது அணைப்புக்குள் விடுத்துக்கொண்டான். அப்ஸல்கானது அரவணைப்புக்குள் சிவாஜி வந்தவுடனே அப்ஸலின் இரும்புப் பிடி மெதுவாகப் பின்பக்கமாகச் சுழன்று வந்து சிவாஜியின் கழுத்தை நெருக்க ஆரம்பித்தது.

சிவாஜி நிலையை உணர்ந்தான். தனது வலது கைக்குள் அவன் தயாராகப் புலி நகத்தைச் சேர்த்து வைத்திருந்தான். வலது கரத்தை மாத்திரம் கஷ்டப்பட்டு விடுவித்துக் கொண்டு கையை உயர்த்தி, ஓங்கி ஒரு குத்துக் குத்தினான். அப்ஸல்கான் 'ஓ' வென்று அலறிக் கொண்டு கீழே சாய்ந்தான்.

உடனே சிவாஜியின் படைவீரர் பாய்ந்து ஓடிவந்தனர். இரண்டு முகலாய வீரரும் அப்ஸல்கானைத் தூக்கிச் செல்ல முயற்சிக்கையில் அவர்களைத் தாக்கினர். ஒருவன் அப்ஸல்கானின் தலையைச் சீவி, வாள் முனையில் எடுத்து நிறுத்தினான்.

சிவாஜி இந்தக் கட்டத்தில் தன் சங்கை எடுத்து பலமாக ஊதினான். உடனே சிவாஜியின் படைவீரர் அத்தனை பேரும் பாய்ந்து, மலைச் சரிவை விட்டுக் கீழே இறங்கி அப்ஸல் கானது படைத் தளத்தில் உல்லாஸமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவர்களின் மேல் பாய்ந்து, படைவீரர்கள் அத்தனை பேரையும் திணற வைத்தனர். ஏராளமாகக் கொள்ளையடித்தனர். கொள்ளையடித்த தனம் முழுவதையும் சிவாஜி தன் வீரரிடையே பங்கிட்டுக் கொடுத்தான். கணவர்களை இழந்த மராத்திய மனைவிமார்க்கு உதவித் தொகையளித்தான்.

அப்ஸல்கானது வீழ்ச்சியும், சேனையின் படுதோல்வியும் பீஜபுரியை எட்டியபோது எல்லோரும் வியப்புக் காளாயினர். மாதரசி மனம் புண்ணாகித் தனிமைபூண்டாள். சிறிதுகாலம் கழித்து மெக்காவுக்கு சென்றாள்.

டோங்ரேயின்—
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

ஆப்டோன் & லைன்
பிளாக்,
சைன் போர்ட்,
ரப்பர்ஸ்டாம்ப்
சீலடுகள்
செய்யுமிடம்
S.R. ப்ரதர்ஸ்
சின்னக்கம்மாளதெரு .... திருச்சி.

தாம்பூலத்திற்கு
மைதீன்
புகையிலை
மேலானது
E. S. MYDEEN & Co.
இ.ஸ். மைதீன்
TRADE MARK
KUMBAKONAM.

அமிர்தாஞ்சன்
சகல வலி நோவுகளுக்கும்
கைகண்ட மருந்து
எங்கும் கிடைக்கும்
அமிர்தாஞ்சன் லிமிடெட்.,
சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

தி பீர்தான் ஜுஹர்மல் பாங்க் லிமிடெட்
பீர்தான் பில்டிங்ஸ் -: :- திருச்சிராப்பள்ளி.
பிக்சட் டிபாசிட்கள் குறுகிய நீண்ட காலத் தவணைகளுக்கு ஏற்றுக்கொள்ளபடும்.
சேவிங்ஸ் டிபாசிட்டுகளும் போடலாம். வட்டி விபரங்கள் நேரில் அல்லது தபால் மூலம் தலைமை பாங்கியிலோ கிளைகளிலோ தெரிந்துகொள்ளலாம்
தங்கம், வெள்ளி நகைகளின்மீது சகாய வட்டிக்கு கடன் தரப்படும்.
J. ஹூம்சந்த் சேட்.
மானேஜிங் டைரக்டர்.

Regd. No. M. 3398 SHIVAJI 1—5—49 Estd. 1935

குழந்தைகளும் வியாதியும்



குமந்தைகளுக்கு வரும் வியாதிகளின் காரணங்களைக் கண்டறியவும் குழந்தைகளைக் கவனிப்பதற்கான நர்சுகளை பயிற்றுவிப்பதற்குமென டாக்டர் சார்லஸ் வெஸ்ட் என்பார் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் லண்டனிலுள்ள கிரேட் ஆர்மாண்ட் தெருவில் ஒரு ஆஸ்பத்திரியை ஸ்தாபித்தார் இந்த ஆஸ்பத்திரி தற்போது பிரபலமடைந்து வருகிறது. தற்கால ஆராய்ச்சிகளின் பலனாகக்கிடைத்துள்ள சகலவிதமான நவீன சாதனங்களுடனும் கூடிய இந்த ஆஸ்பத்திரி இன்று தன் ஸ்தாபகரின் அபிலாஷைகளைப்பூர்த்தி செய்ய வேண்டும்.

குழந்தைகளின் உயிருக்கே உலைவைக்கும் குடல் வேக்காடு நோய்க்கு உடனடியாக சிகித்சை அளிப்பதற்காக இந்த ஆஸ்பத்திரி சமீபத்தில் "பறக்கும் ஸ்குவாட்"களை நியமித்திருக்கிறது. (பிரிட்டனில் சிசு மரண விகிதம் மிகக் குறைவானதென்றாலும் இதில் பெரும் பகுதி குடல் அழற்சி நோய் காரணமாகவே சம்பவிக்கிறதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.)

ஒவ்வொரு ஸ்குவாடிலும் விசேஷ பயிற்சி பெற்ற மூன்று நர்சுகளும் ஒரு வைத்திய நிபுணரும் உள்ளனர். இங்கிலாந்து, வேல்ஸிலுள்ள எந்தவொரு ஆஸ்பத்திரியும் இதன் விசேஷ உதவியைப்பெற்றுக் கொள்ளலாம். அழைப்புவரும் ஸ்தலத்திற்கு உடனடியாக விரைந்து செல்வதற்காக இந்த 'ஸ்குவாட்'கள் எப்போதும் தயாராக இருக்கிறனர்.

இவ்வியாதி மிகக்கொடிய தொத்து நோயாகையால் வியாதியஸ்தர்கள் பூரணமாக ஒதுக்கிவைக்கப்பட வேண்டும். அத்துடன் சுகாதார விதிகளையும் மிகக்கண்டிதமாகம் பின்பற்ற வேண்டும். நோயாளியின் புஜத்திலுள்ள சிரைகள் (Veins) மூலமாகத்தான் சிகித்சை அளிக்கப்படுகிறது. சிகித்சை பெறும் குழந்தைகளை நன்கு கவனித்து வரவேண்டியதும் சிகித்சையின் ஒரு முக்கிய பாகமாகும். இங்குதான் பிரஸ்தாப ஆஸ்பத்திரியின் "நடமாடும் யூனிட்" சேவைக்கு வருகிறது. இந்த யூனிட்டிலுள்ள சிப்பந்திகளின் அனுபவமும், விசேஷ பயிற்சியும் நோயாளிக்கு நல்ல சிகித்சை கிடைக்குமென உறுதி அளிக்கிறது.

"நடமாடும் ஸ்குவாட்" அழைக்கப்பட்டவுடன் என்ன நடக்கிறதென்பதையும் "நடமாடும் யூனிட்"டின் வேலையையும் தான் இத்துடன் பிரசுரிக்கப்பட்டிருக்கும் படம் விளக்குகிறது.

இந்தியா வந்துள்ள பிரிட்டிஷ் உணவு நிபுணர்

லார்டு பாய்ட்—ஓர்

உணவு உற்பத்தி சம்பந்தமாக ஆலோசனை கூறுவதற்காக இந்திய அரசாங்கத்தின் விசேஷ அழைப்பின் பேரில் இந்தியா வந்திருக்கும் லார்ட் பாய்ட்-ஓர் ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய ஸ்தாபனத்தின் மாஜி டைரக்டர் ஜெனரலாவார்.

இவருக்கு தற்போது 69 வயதாகிறது இவர் பல வருடங்கள் வரை குடியேற்ற நாடுகள் காரியாலத்தைச் சேர்ந்த விவசாய கால் நடை ஆலோசக கவுன்சிலின் அங்கத்தினராக இருந்திருக்கிறார். ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, கானடா அரசாங்கங்களின் வேண்டுகோளின் பேரில் இவர் அந்நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து விவசாயம் சம்பந்தமான அறிக்கையை தயாரித்துக் கொடுத்திருக்கிறார்.

1936 ஆண்டு இவர் வெளியிட்ட "உணவு, ஆரோக்கியம் வருமானம்" என்ற புத்தகம் மிகப் பிரபலமானதாகும். ஏழைமக்களின் போஷாக்குக் குறைகளை இவர் இப்புத்தகத்தில் தெற்றென விளக்கியுள்ளார். உலக முழுவதிலுமுள்ள விவசாய, உணவுப் பிரச்னைகளைத் தவிர்ப்பதற்கு புது வழியில் நடவடிக்கை எடுக்க இப்புத்தகம் அரிய உதவியாக இருந்தது. விலைகளை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்துடன் உணவு உற்பத்தியையும், விநியோகத்தையும் கட்டுப் படுத்துவதென்ற கொள்கையை இவர் பத்திரிகைகள் மூலமும் பிரசங்கங்களிலும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார். அத்துடன் நாட்டின் விவசாயத்தை அரசாங்க உணவு இலாகா ஒன்று ஏற்று நடத்தவேண்டுமென்றும், ஒவ்வொருவருக்கும் போதிய போஷாக்குள்ள உணவு கிடைக்கும்படி உணவுப் பொருள்களை விநியோகிக்க வேண்டுமென்றும் இவர் அதுபோது யோசனை கூறினார்.

1932 வருடம் இவர் ராயல் கழகத்தின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் 1937-ல் அரசாங்க போஷாக்குக் கமிட்டியின் அங்கத்தினருமானார்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது லார்டு பாய்ட்-ஓர் "யுத்தகாலத்தில் மக்களுக்கு உணவளிப்பது எப்படி?" என்ற புத்தகத்தை வெளியிட்டதுடன் அது சம்பந்தமாக வானொலி மூலமும், கூட்டங்களிலும் பல சொற்பொழிவுகள் ஆற்றினார். 1941, 42 வருடங்களில் இவர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தபோது உணவு சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்க ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஒன்று அமைக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

சாஸ்வதமான சர்வதேச ஸ்தாபனமாக ஒரு உலக உணவு போர்டு அமைக்கப்பட வேண்டுமென்ற இவருடைய யோசனைகள் நன்கு விவாதிக்கப்பட்டு உணவு, விவசாய ஸ்தாபனம் ஒரு உலக உணவு போர்டையும் ஸ்தாபித்தது.

சமீபத்தில் தான் லார்டு பாய்ட்-ஓர் ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனத்தின் டைரக்டர் ஜெனரல் பதவியிலிருந்து விலகினார்.

Printed at The Trichinopoly United Printers Ltd., Tiruchirapalli, and Published by Thiruloka-Sitharam (Editor).